தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**15.06.2013 A.M**

## தனியார் தோட்டங்களில் பண்ணைக்குட்டைகள் அமைக்க உத்தரவு

தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ், தனியார் தோட்டங்களில் பண்ணைக் குட்டைகள் அமைக்க, ஊராட்சி ஒன்றியங்களுக்கு அரசு உத்தரவிட்டுள்ளது.

ஊராட்சிகளில் உள்ள கண்மாய், ஊரணிகள், நீர்வரத்து ஓடைகள், தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தில் தூர்வாரி ஆழப்படுத்தப்பட்டன.

மழை காலம் தொடங்கும் முன் நீர்வரத்து ஓடைகளுக்கு அருகில் உள்ள தனியார் தோட்டங்களில் பண்ணைக் குட்டைகள் அமைக்க அனைத்து ஒன்றியங்களுக்கும் தமிழக அரசின் ஊரக வளர்ச்சித் துறை உத்தரவிட்டுள்ளது.

காட்டாற்று ஓடை வரும் பாதையில் உள்ள தனியார் தோட்டங்களில் குறிப்பிட்ட அளவில் பண்ணை குட்டை அமைக்க வேண்டும்.

இதற்கு விருப்பம் உள்ள விவசாயிகள் தங்கள் தோட்டத்தின் சிட்டா, அடங்கலுடன் வட்டார வளர்ச்சி அலுவலரைத் தொடர்பு கொள்ளலாம் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

## மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு பிரசாரம்

கடலூரில், நகராட்சி சார்பில் மழைநீர் சேகரிப்பை வலியுறுத்தி ஊர்தி மூலம் விழிப்புணர்வு பிரசாரம் புதன்கிழமை நடைபெற்றது.

பருவமழைக்காலம் விரைவில் தொடங்கவுள்ள நிலையில், கடலூர் இப்பிரசாரம் செய்யப்பட்டது.

இதற்காக ஊர்தியில் மழைநீர் சேகரிப்பு திட்டத்தை விளக்கும் மாதிரி வீட்டை வடிவமைத்து, நகராட்சி முழுவதும் பிரசாரம் செய்யப்பட்டு வருகிறது. இப்பிரசார பணியை நகராட்சி தலைவர் சுப்ரமணியன் பார்வையிட்டார். ஆணையர் காளிமுத்து, பொறியாளர் ரவி மற்றும் அதிகாரிகள் உடனிருந்தனர்.

## சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சதவீத மானியத்தில் தெளிப்பு நீர்ப்பாசனக் கருவிகள் வழங்கப்படும்:ஆட்சியர்

சிவகங்கை மாவட்டத்தில் இந்தாண்டு தோட்டக்கலைத் துறை மற்றும் வேளாண்துறை மூலம் தகுதியுள்ள அனைத்து சிறு,குறு விவசாயிகளுக்கும் 100 சதவீத மானியத்திலும், இதர விவசாயிகளுக்கு 75 சதவீத மானியத்திலும் சொட்டுநீர் பாசனம், தெளிப்பு நீர்ப்பாசன கருவிகள் அமைத்துத் தரப்படும் என மாவட்ட ஆட்சியர் வே.ராஜாராமன் தெரிவித்தார்.

சிவகங்கை வட்டாரம் நாமனூர் கிராமத்தில் வெள்ளிக்கிழமை தோட்டக்கலை துறை மூலம் மாவட்ட அளவிலான நுண்ணீர் பாசன இயக்க முகாம் நடைபெற்றது. முகாமினைத் துவக்கி வைத்து செயல்முறை விளக்கத்தைப் பார்வையிட்டு ஆட்சியர் பேசியதாவது:

சிவகங்கை மாவட்டத்தில் கரும்பு, வாழை, தென்னை, மா, கடலை மற்றும் காய்கறிப் பயிர்கள் சுமார் 35 ஆயிரம் ஏக்கர் பரப்பில் பயிரிடப்பட்டு வருகிறது. ஆனால் இப்பரப்பில் இதுவரை சுமார் 10ஆயிரம் ஏக்கர் மட்டுமே நுண்ணீர் பாசன கருவிகள் மூலம் பாசனம் பெறப்பட்டது. மீதமுள்ள பரப்பிற்கு சிக்கன முறையில் சொட்டு நீர் மற்றும் தெளிப்பு நீர்பாசன கருவிகள் அமைத்து குறைந்தளவு பாசன

நீரைக் கொண்டு அதிகபரப்பில் சாகுபடி செய்ய முடியும்.

தற்போது தமிழக அரசின் மூலம் சிறு, குறு விவசாயிகளுக்கு அவர்கள் சாகுபடி செய்யும் மொத்த பரப்பிற்கும் 100 சதவீத மானியத்தில் நுண்ணீர் பாசனக் கருவிகள் அமைத்துத் தர உத்தரவிடப்பட்டுள்ளது. இதேபோல் இதர விவசாயிகளுக்கும் 75 சதவீத மானியத்தில் அமைத்துத்தரப்படும்.

இத்திட்டத்தின் கீழ் விவசாயிகள் பயன்பெறும் வகையில் அனைத்து கிராமங்களிலும் தோட்டக் கலைத்துறை, வேளாண் துறை அட்மா தொழில்நுட்ப பணியாளர்கள் மற்றும் வருவாய் துறை அலுவலர்கள் இணைந்து சிறப்பு முகாம்களை நடத்த உள்ளனர்.

இந்த முகாம்களில் விவசாயிகள் தேர்வு, மண் மாதிரி, பாசன நீர் மாதிரி ஆய்வு மற்றும் தேவையான ஆவணங்கள் பெறப்பட்டு நுண்ணீர் பாசன கருவிகள் விரைவாக அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

முதல் கட்டமாக நாமனூர், கட்டாணிபட்டி, லட்சுமிபுரம், கருத்தம்பட்டி, அம்மச்சிப்பட்டி, பொன்குண்டுப்பட்டி ஆகிய கிராமங்களில் இதற்கான சிறப்பு முகாம்கள் நடைபெறும். இந்த முகாமில் அனைத்து விவசாயிகளும் கலந்து கொண்டு நுண்ணீர் பாசனக் கருவிகள் அமைத்து குறைந்த அளவு பாசன நீரைப் பயன்படுத்தி வறட்சியான சூழ்நிலையிலும் அதிகளவு விளைச்சல் பெற வேண்டும் என்றார் ஆட்சியர்.

முகாமில் சிவகங்கை ஒன்றிய குழுத் தலைவர் பாஸ்கரன், தோட்டக்கலை துணை இயக்குநர் எஸ்.இருளப்பன், வேளாண் இணை இயக்குநர் செல்லத்துரை, வேளாண் பொறியியல் செயற்பொறியாளர் ராஜகோபால், குன்றக்குடி வேளாண் அறிவியல் நிலைய தலைவர் மீனாட்சி சுந்தரம், செந்தூர் குமரன் ஆகியோர் கலந்து கொண்டு விளக்கவுரை ஆற்றினர்.

தோட்டக்கலை உதவி இயக்குநர் பி.கல்யாணசுந்தரம், பொ.பிச்சைமணி ஆகியோர் முகாமிற்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

## நவீன வேளாண் கருவிகள் குறித்து விவசாயிகளுக்கு செயல்முறை விளக்கம்

நவீன வேளாண் கருவிகள் குறித்து பிரவலூர் ஊராட்சியைச் சேர்ந்த விவசாயிகளுக்கு செயல்முறை விளக்கம் காண்பிக்கப்பட்டது.

திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூர் தோட்டக்கலை துறையின் உதவி இயக்குநராகப் பணியாற்றி வருபவர் பி.டேவிட் ராஜா பியூலா. இவர் வேளாண் பணிகளை எளிமையாக்கும் வகையில் சூரிய ஒளி மூலம் இயங்கும் வறட்சியைத் தாங்கும் தெளிப்பான், தெருவிளக்குடன் கூடிய பூச்சி பிடிக்கும் கருவி, சொட்டுநீர் தெளிப்பான் ஆகிய கருவிகளை கண்டுபிடித்துள்ளார். இக்கருவிகளை சிவகங்கை மாவட்ட

விவசாயிகள் பயன்பெறும் வகையில் செயல்முறை விளக்கம் செய்து காண்பிக்க மாவட்ட ஆட்சியர் வே.ராஜாராமன் வலியுறுத்தி இருந்தார். இதையடுத்து, பாண்டியன் கிராம வங்கி சார்பில் காளையார்கோவில் ஒன்றியம், பிரவலூர் ஊராட்சியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் செயல்முறை விளக்கத்தை  டேவிட் ராஜா பியூலா செய்து காண்பித்தார்.

காரைக்குடி, ஜூன் 14: கோவிலூர் மடாலயத்தை 1809-ஆம் ஆண்டு நிறுவிய முத்துராமலிங்க ஆண்டவர் சிலை திறப்புவிழா நடைபெற்றது.

கோவிலூர் ஆண்டவர் மெட்ரிக் பள்ளி வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள சிலையை உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதி ஏஆர். லெட்சுமணன் திறந்துவைத்து சிறப்புரையாற்றினார். கோவிலூர் ஆதீனம் மெய்யப்ப சுவாமிகள், அழகப்பா பல்கலைக்கழக துணைவேந்தர் சேது. சுடலைமுத்து ஆகியோர் முன்னிலை வகித்தனர். நாச்சியப்ப சுவாமிகள் கலை அறிவியல் கல்லூரி முதல்வர் சே. குமரப்பன் வரவேற்றார். பேராசிரியர் கார்மேகம் நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினார்.

முடிவில் மெட்ரிக். பள்ளி முதல்வர் மணிமொழி மோகன் நன்றி கூறினார்.

## கொப்பரை கொள்முதல் நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?நமது நிருபர்

விருதுநகர் மாவட்டத்தில், தேங்காய்களுக்கு போதிய விலை கிடைக்கும் வகையில் தேங்காய் கொப்பரை கொள்முதல் நிலையம் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

விருதுநகர் மாவட்டத்தில், ராஜபாளையம், சேத்தூர், கிருஷ்ணாபுரம், சுந்தராஜபுரம், ஸ்ரீவில்லிபுத்தூர், மம்சாபுரம், திருவண்ணாமலை, வத்திராயிருப்பு, தாணிப்பாறை, அய்யனார்கோயில் உள்ளிட்ட மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரப் பகுதிகளில் அதிகமாகவும், அருப்புக்கோட்டை, திருச்சுழி, சாத்தூர் உள்ளிட்ட பகுதிகளில் குறைவாகவும், மொத்தம் 24 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் தென்னை பயிரிட்டுள்ளனர். ஏற்கெனவே, வறட்சியால் இப்பகுதியில் கடுமையாக தென்னை விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஒரு ஏக்கரில் 70 முதல் 80 தென்னை மரங்கள் வரை பயிரிடப்பட்டிருக்கும். இதிலிருந்து 50 நாள்களுக்கு ஒருமுறை தேங்காய் பறிக்கப்படுகிறது. இதில், நல்ல தண்ணீர் மற்றும் பராமரிப்பு வசதியுடன் இருந்தால் 1,000 முதல் 1,200 தேங்காய்கள் கிடைக்கும். அதேபோல், தென்னை மரங்களில் இருந்து ஆண்டுக்கு 6 முறை பறிக்கலாம். இதில், தரமாக விளைந்த 100 காய்களில் இருந்து 9 முதல் 10 கிலோ வரையில், தேங்காய் கொப்பரை கிடைக்கும். தற்போது, ஒரு கிலோ கொப்பரையின் விலை ரூ. 43-க்கு விற்கப்படுகிறது. கடந்த 6 மாதங்களுக்கு முன் வரையில் ரூ. 48-க்கு விற்பனையானது.

விலை வீழ்ச்சி: மேலும், விவசாயிகளுக்கு சோதனையை ஏற்படுத்தும் வகையில் தேங்காய் விலை வீழச்சி அடைந்துள்ளது. கடந்த மூன்று மாதங்களுக்கு முன் வரையில் நாட்டுத் தேங்காய் ரூ. 4.80 வரையிலும் விலை போனது. ஆனால், தற்போது ரூ. 3.50-க்கு விலை போகிறது.

இதனால், பயிர் பராமரிப்புச் செலவைக் கூட எடுக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. இதிலும், இப்பகுதியில் உள்ள வியாபாரிகள் சிண்டிகேட் அமைத்து விலை பேசி தேங்காய்களை வாங்கி வருகின்றனர். ஆனால், கடைகளில் கூடுதலாகவே விற்பனை செய்யப்படுகிறது. இதுபோன்ற நிலையில், அரசு குறிப்பிட்ட விலையை நிர்ணயம் செய்து தேங்காய் கொப்பரை கொள்முதல் நிலையம் அமைத்து, நேரடியாகந் கொள்முதல் செய்தால் மட்டுமே, நஷ்டத்திலிருந்து காப்பாற்ற முடியும் என தென்னை விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இதுகுறித்து, தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாவட்டச் செயலர் விஜயமுருகன் கூறுகையில், தற்போது, கடும் வறட்சி நிலவி வருகிறது. இந் நிலையிய்க் தேங்காய் உற்பத்தியும் குறைவு, விலையும் குறைவாகவும் இருப்பதால் விவசாயிகள் நஷ்டமடையும் சூழ்நிலை ஏற்படுகிறது.

இதற்கு முன்பு வரையில் உற்பத்தி குறைவாக இருக்கும் போதுதான் விலை அதிகமாக கிடைக்கிற நிலை இருந்தது. ஆனால், நிலைமை தலைகீழாக மாறிவிட்டது.

இதைக் கருத்தில் கொண்டு தர்மபுரி, மதுரை, திருச்சி உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில், தேங்காய் கொப்பரை கொள்முதல் நிலையம் தொடங்கி செயல்பட்டு வருகிறது. அதேபோல, விவசாயிகளுக்கு உரிய விலை கிடைக்க வேண்டுமானால்,

விருதுநகரிலும் கடந்த 15 ஆண்டுகளுக்கு முன் இருந்ததைப் போல மீண்டும் தேங்காய் கொள்முதல் நிலையம் அமைக்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார். மேலும், இது தொடர்பாக வேளாண்மைத் துறை இணை இயக்குநர் சுப்பையா கூறுகையில், தேங்காய்க் கொப்பரை கொள்முதல் நிலையம் அமைப்பது என்பது அரசின் முடிவாகும்.

குறிப்பிட்ட பகுதிகளில், அதிக பரப்பளவில் தென்னை விவசாயம் நடைபெறுகிறது. அதனால், கொப்பரைகளுக்கு நிர்ணய விலை கிடைக்க வேண்டும் என்பதற்காக ஏற்கெனவே இருந்தது போல கொள்முதல் நிலையம் அமைக்க வேண்டும் என விவசாயிகள் தெரிவித்து வருகின்றனர்.

இது தொடர்பாக ஆட்சியரும் பரிந்துரை செய்து, அரசுக்கு அனுப்பியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

## மழையில்லாமல் வறட்சி

ராஜபாளையத்துக்கு மேற்கே கேரள வனப் பகுதியில் தென்மேற்குப் பருவமழை துவங்கியும், தமிழக வனப் பகுதியில் வெறும் சாரல் மழையே பெய்து வருவதால், ராஜபாளையம் ஆறாவது மைல் குடிநீர் தேக்கத்துக்கு தண்ணீர் வரத்து இல்லை.

கேரளாத்தில் தென்மேற்குப் பருவ மழை, கடந்த சில நாள்களாகப் பெய்து வருகிறது. கொல்லம் மாவட்டத்திலும், திருவனந்தபுரம் மாவட்டத்திலும் பெய்துவரும் கனமழையால், குற்றாலம் பாபநாசம் அருவிகளில் தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது.

ராஜபாளையத்துக்கு மேற்கே உள்ள கேரள வனப்பகுதி பெரியார் புலிகள் சரணாலயப் பகுதியிலும், கடந்த இரு நாள்களாக பருவமழை பெய்யத் துவங்கி உள்ளது.

பொதுவாக, இப்பகுதியில் மழை பெய்யும் போது, இதை அடுத்து கிழக்குப் பகுதியில் உள்ள ராஜபாளையம் வனப்பகுதியிலும் பரவலாக மழை பெய்யும்.

இதனால் ராஜபாளையம் அய்யனார் கோயில் ஆறு, மலட்டாறு மற்றும் முடங்கியாற்றில் அதிகளவில் தண்ணீர் வந்து, ராஜபாளையம் ஆறாவது மைல் குடிநீர் தேக்கத்தில் தண்ணீர் தேங்கும்.

தேவதானம் நகரியாற்றிலும், அதிகளவில் தண்ணீர் வரத்து ஏற்பட்டு, சாஸ்தா கோயில் நீர் தேக்கத்துக்கும் தண்ணீர் வந்து சேரும்.

தமிழக வனப் பகுதியில் குறைந்த அளவு மழைகூட பெய்யாததால், ராஜபாளையம் பகுதி தொடர்ந்து வறட்சியாகவே உள்ளது. ஆறாவது மைல் குடிநீர் தேக்கம் தண்ணீர் இல்லாமல் வறட்சியாக இருப்பதால், ராஜபாளையத்தில் பத்து நாள்களுக்கு ஒருமுறையே குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது.

## நபார்டு நீர்வடிப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்

விருதுநகர் மாவட்டம், அழகியநல்லூர் கிராமத்தில் நபார்டு நீர்வடிப் பகுதி மேம்பாட்டுத் திட்ட தொடக்க விழா மாவட்ட ஆட்சியர் டி.என். ஹரிஹரன் தலைமையில் வியாழக்கிழமை நடைபெற்றது.

திட்டத்தைத் தொடங்கி வைத்து ஆட்சியர் பேசுகையில் கூறியதாவது: இத் திட்டத்தின் கீழ் அழகியநல்லூர், மேலதுலுக்கன்குளம், கீழதுலுக்கன்குளம் மற்றும் நந்திக்குண்டு ஆகிய கிராமப் பகுதிகளில் உள்ள மானாவாரி நிலங்களில் சிறு மற்றும் குறு விவசாயிகளின் பங்களிப்போடு மண் கரை வரப்பு அமைத்தல், பண்ணைக் குட்டை அமைத்தல், சங்கன்பாண்டு அமைத்தல், பழ மரக்கன்றுகள் வழங்குதல், நிலம் இல்லாதவர்களின் வாழ்வாதாரத்துக்கும், பெண்களின் வாழ்வாதரத்துக்கும் உதவி செய்தல் போன்ற பணிகள் நிறைவேற்றப்படவுள்ளன. இத்திட்டத்தில் 1,123 பணிகள் 30.5 ஹெக்டேர் நிலப்பரப்பில் செயல்படுத்தப்பட உள்ளது. இதன் மூலம் 2,706 விவசாயிகள் நேரடியாகவும், மறைமுகமாகவும் பயனடைவார்கள். மாவட்டம் வறட்சிக்கு இலக்காகும் பகுதியாக இருப்பதால், விவசாயிகள் அனைவரும் இந்தத் திட்டத்தை நல்லமுறையில் பயன்படுத்திக் கொள்வதோடு, முழு ஒத்துழைப்புக் கொடுத்து தங்களின் வாழ்வாதார நிலையை மேம்படுத்திக் கொள்ள வேண்டும்.

பண்ணைக் குட்டைகளில் மழை நீர் சேகரிக்கப்படுவதன் மூலம் விவசாயிகள் ஒரு போகம் சாகுபடி செய்வதற்கு பண்ணைக் குட்டைகளிலிருந்து தேங்கியுள்ள தண்ணீரைப் பயன்படுத்தி பயன்பெறலாம். மேலும் வரப்பு அமைப்பதன் மூலம் அதிக தண்ணீரை தேக்க முடியும். இதற்கு பொதுமக்கள் பங்களிப்புடன் செயல்பட்டு இந்த திட்டத்தின் மூலம் நல்ல பயனும், பலனும் முறையாகப் பெற்று பயன்பெற வேண்டும் என்றார்.

முன்னதாக நபார்டு நீர்வடிப் பகுதி திட்ட செயலாக்க அலகு துணைப் பொது மேலாளர் எஸ். நடராஜன் திட்ட விளக்கவுரையாற்றினார். விழாவில் பல்துறை அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## கொடிது கொடிது வறுமை கொடிது

அம்மா பசிக்குதே
தாயே பசிக்குதே
பாலும் பழமும் வேண்டாம் தாயே
பசிக்கு சோறு போட்டால் போதும்"

ஹைதர் காலத்து சினிமா பாட்டு. கூட்டுக் குடும்பத்தில் வளர்ந்த நானும் என் சகோதர சகோதரிகளுடன் - "கஸின்ஸ்' என்று நினைத்ததில்லை - இந்தப் பாட்டை பாடிக்கொண்டே இருப்போம். இந்தப் பாட்டின் பொருளைப் புரிந்து கொண்டோமா? அழுகை வரும். ஆனால், வறுமையின் முழுப்பரிமாணமும் புரிந்திருக்காது.

சமீபத்தில் ஒரு நிகழ்ச்சியில் ஒரு பேராசிரியர் கூறினார் - ""சாலைகளில் பிச்சையெடுப்பவர்களைத் திருடர்களென்றும் சோம்பேறிகளென்றும் திட்டாதீர்கள். அவர்களுக்குப் பசி, உங்களிடம் கேட்கிறார்கள். முடிந்தால் கொடுங்கள். உங்களுக்குக் கொடுக்கப் பிடிக்காததற்குக் காரணங்கள் உங்களிடம் உள்ளன. அந்தக் குற்ற உணர்வைச் சமாதானப்படுத்துவதற்கு பிச்சை எடுப்பவர் மேல் தவறைத் திணிக்காதீர்கள்" என்று! சிந்திக்க நிறைய நொடிகள் தேவை.

ஒரு மனிதநேயம் பொதிந்த, தில்லி உயர் நீதிமன்றத் தீர்ப்பினை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன். ராம் லக்கன் என்று ஒரு ஏழை. பிச்சை எடுப்பதைத் தடுக்கும் சட்டம் என்று ஒரு சட்டம். நாம் சுதந்திரம் பெற்று எல்லோருக்கும் "ரோடி, கப்டா, ஓளர் மக்கான்'

(உணவு, உடை, உறைவிடம்) இன்றுவரை கிடைக்கவில்லை. ஆனால், இந்தச் சட்டம் இன்றும் நிலுவையில் உள்ளது.

ராம் லக்கன் என்ன செய்தாரென்றால், 29-07-2005, 12 மணி அளவில் ராம்புரா (தில்லி) ரயிலடி அருகே கையை நீட்டி ஏதோ கேட்டார். உடனே இரண்டு காவல்துறை அதிகாரிகள், "மேற்படி சட்டத்தின் கீழ்' குற்றமிழைத்ததாக அவரைப் பிடித்துவிட்டார்கள். குற்றம் நிரூபணம் ஆகிவிட்டது என்று நீதிமன்றம் தண்டனை விதித்தது. மேல்முறையீட்டிலும் ராம்லக்கன் வெற்றி பெறவில்லை. உயர் நீதிமன்றத்தில் "சீராய்வு' மனு தாக்கல் செய்தனர்; அதில்தான் இந்தத் தீர்ப்பு கூறப்பட்டது.

அந்தத் தீர்ப்பு, பிச்சை எடுப்பவர்களை நான்கு வகையாகப் பிரித்தது. பசி, பட்டினியால் பிச்சை எடுப்பவர்கள் உயிர் வாழ்வதற்காகப் பிச்சை எடுக்கிறார்கள்; சட்டத்தின் குறிக்கோள் பிச்சை எடுப்பதைத் தடுப்பது; அதில் புதையுண்டு இருக்கும் இரு இலக்கு என்னவென்றால் - யாரும் பிச்சை எடுக்கக் கூடாது, யாரும் பிச்சையெடுக்கும் நிர்பந்த சூழலில் இருக்கக் கூடாது என்பதாகும்.

கனடா, இங்கிலாந்து நாட்டுத் தீர்ப்புகளை மேற்கோள் காட்டி, "வேறு வழியில்லாமல் ஒருவர் ஒரு சட்டத்தை மீறுகிறார் என்றால் அது குற்றமல்ல' என்றும், மேலும் - "எனக்குப் பசிக்கிறது' என்று சொல்லும் பேச்சுரிமை நம் குடிமக்களுக்கு உண்டு என்றும் கூறியுள்ளது.

இவ்வாறாக பிச்சையெடுப்பதை சமூக நோக்கோடு பார்த்து, இந்தச் சட்டத்தின்கீழ் எப்படி நீதிமன்றங்கள் செயல்பட வேண்டும் என்று விதிமுறை வகுத்துள்ளது.

எல்லோரும் பிச்சை எடுக்க வேண்டும் என்று சொல்லவில்லை. நாம் எப்படி இந்த விஷயத்தைப் பார்க்க வேண்டும் என்று சொல்ல வருகிறேன். என் சிநேகிதர் ஒருவர் - இலங்கையிலிருந்து பல வருடங்களுக்கு முன் இங்கு வந்த தமிழர் - என்னைக் கேட்டார்; ""எங்கள் நாட்டில் யாரேனும் பிச்சை கேட்டால், அவரைப் பார்த்து அவர் கையில் காசைக் கொடுப்போம். நீங்கள் எல்லோரும் அவர்களைப் பார்ப்பதே இல்லையே, அவர்களும் மனிதர்கள்தானே?".

கன்னத்தில் அறைந்ததுபோல் இருந்தது. உண்மைதானே? பிச்சையெடுப்பவரின் கண்ணியத்தை மதிக்க வேண்டும். அது அடிப்படை உரிமை, அது மனித உரிமை. ஜனநாயகத்தின் நான்கு தூண்களில் ஒன்று சகோதரத்துவம். அவரும் நாமும் ஒன்றுதான். கவிஞர் ஜான் டன்னின் கவிதை இது. ""எந்தவொரு மனிதனும் தீவல்ல. எங்கோ சாவு மணி ஒலித்தால், யாருக்கு என்று கேட்காதே, அது உனக்காகவும்தான்".

ஆனால் நாம், என் சிநேகிதர் சொன்னதுபோல, பிச்சை எடுப்பவர்களை மனிதர்களாகவே மதிப்பதில்லை. அவர்களைத் திட்டுவோம், ஏசுவோம், அப்படியே காசை எடுத்தால் அதை விட்டெறிவோம். விதியின் வசத்தில் நாம் காசு கொடுக்கும் நபராக இருக்கிறோம், நாமே காசு கேட்கும் நபராகப் பிறந்திருக்கலாம், இல்லையா?

நம் நாட்டில் வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்பவர்கள்தான் பெரும்பான்மையினர். வறுமையினால் அவர்களுக்கு வலிமை இல்லை. ஏழையாகப் பிறப்பது குற்றமென்றால், நம் நாட்டில் சிறைச்சாலைகள் இன்னும் லட்சக்கணக்கில் கட்டப்பட வேண்டும். ஒரு நாளைக்கு ஒருவருக்கு 32 ரூபாய்க்கு மேல் கிடைத்தால் அவர் ஏழை இல்லை என்று திட்டக் கமிஷன் கூறியது. பலவிதமான விமர்சனங்கள் இதற்கு.

அமெரிக்காவில் படித்து, இந்தியாவுக்கு வந்த இரு இளைஞர்கள் இந்தியனின் சராசரி வருமானம் என்ன என்று பார்த்தார்கள். கூட்டிக் கழித்துப் பார்த்ததில் ஒரு நாளைக்கு ரூ. 150 என்று தெரிந்தது. பிறகு ஒரு நாளைக்கு 32 ரூபாய்க்குள் வாழ முடியுமா என்ற கேள்வி எழுந்தது. அந்த 32 ரூபாய்க்குள் வாழ்ந்து பார்த்தார்கள்.

அந்தப் பரிசோதனைக் காலத்தின் முடிவில் அவர்கள் கூறியது இதுதான் - ""மறுபடியும் பழைய வாழ்க்கைக்குத் திரும்பப் போகிறோம் என்று மகிழ்ச்சியாக இருக்கிறது என்று சொல்ல ஆசைதான், ஆனால் முடியவில்லை; நாங்கள் நல்ல உணவை ஒவ்வொரு வாய் உண்ணும்பொழுதும், நம் நாட்டில் 40 கோடி மக்களுக்கு இந்த உணவு - கனவாகவே இருக்கும் என்பதை எங்களுக்கு நினைவூட்டியது. நாங்கள் இன்று பழையபடி எங்கள் சுகமான வாழ்வுக்குத் திரும்பிவிட்டோம். அவர்கள் தினமும் உயிருக்குப் போராடுகிறார்கள்... அவர்கள் வாழ்க்கையில் சுதந்திரம் சொற்பமே.. பசியோ ஏராளம்".

ஒரு குற்ற உணர்வுகூட அந்த இருவரிடமும் தேங்கியது எனச் சொல்லலாம்.

ஏழ்மையெனும் முடிவிலா இருட்டு குகையில் பலர்... வெளிச்சமும் விருந்தும் வெளியே. எப்படி, இப்படி ஒரு சமமிலா தராசாக நம் சமூகம் உள்ளது?

""நம் எல்லோருடைய தேவைக்கு வேண்டியது நாட்டில் இருக்கிறது; ஆனால், நம்முடைய பேராசைக்குத் தீனிபோடும் அளவுக்கு இல்லை" என்றார் காந்தியடிகள்.

சமூக ஏற்றத்தாழ்வுகளை ஒருநாளில் மாற்ற முடியாது. ஆனால், ஏழைகளை - பிச்சையெடுப்பவர்களை மனிதர்களாக மதிக்கலாம் இல்லையா? இன்னொரு வழக்கு பற்றி சொல்கிறேன்.

ஒரு பிரெஞ்சு நாட்டுக்காரர் இந்தியா வந்தார். கேரளத்தில் அமிர்தானந்தமயி ஆசிரமம் சென்றார். அங்கிருந்து கிளம்பியபின் அவருடைய "பாஸ்போர்ட்' முதல் எல்லாம் திருடப்பட்டன. அவருக்கு பிரெஞ்சு மொழி தவிர வேறொன்றும் தெரியாது. பாவம், அலைந்து அலைந்து கன்னியாகுமரிக்கு வந்து பிச்சையெடுத்துக் கொண்டிருந்தார். இதற்கிடையில் பிரான்ஸ் நாட்டில் அவர் மகள், அப்பாவிடமிருந்து தகவல் இல்லையே, அவருடைய விசாக்காலம் முடிவடைந்துவிட்டதே என்று நம் நாட்டிலிருக்கும் அவர்களுடைய தூதரகத்துடன் தொடர்பு கொண்டார். ஒன்றும் பலனில்லை.

இந்தியா வந்து சென்னையில் உயர் நீதிமன்றத்தில் "ஹேபியஸ் கார்பஸ்' என்னும் "பேராண்மை மனு' தாக்கல் செய்தார். அவர் காணவில்லையென்றும், அவர் சட்டத்துக்குப் புறம்பாக எங்கோ அடைக்கப்பட்டிருக்கிறாரென்றும், உடனே அவரை கோர்ட்டின் முன் ஆஜர் செய்ய வேண்டும் என்றும் கேட்டார். உயர் நீதிமன்றம் அரசு வழக்குரைஞரிடம் உடனடியாக அவரை ஆஜர் செய்ய வேண்டும் என்று உத்தரவிட்டது.

அவர் வந்தார். விஷயம் என்னவென்றால் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவருக்கு திடீரென்று வீதிகளில் நிறைய பிச்சைக்காரர்கள் இருப்பதால் எல்லோரையும் "ரவுண்ட் - அப்' செய்ய வேண்டும் என்று தோன்றிவிட்டது. கிட்டத்தட்ட நூற்றுக்கும்மேல் பிச்சைக்காரர்களை வளைத்து அவர்கள் "மனநோய் உள்ளவர்களாக'ச் சான்றிதழ் பெற்று, மனநோய் ஆஸ்பத்திரியில் சேர்த்துவிட்டனர். இந்த வழக்கில் வேறு சில பரிமாணங்கள் உள்ளன.

அவர்கள் ஏழைகள்தான், பிச்சைக்காரர்கள்தான் - ஆனால், மனிதர்கள். அரசமைப்புச் சட்டத்தின் முழுப் பாதுகாப்பு உண்டு. மறந்து விட்டேனே, பிச்சையெடுத்து "ரவுண்ட் - அப்' செய்யப்பட்டவர்களில் அந்தப் பிரெஞ்சு நாட்டு அப்பாவும் ஒருவர். அவர் மகளுடன் "பெற்றோம் - பிழைத்தோம்' என்று தாய்நாடு சென்றார்.

தெருவில் சுற்றும் நாய்களை "ரவுண்ட்-அப்' செய்தாலே பிராணிகள் பாதுகாப்பு அமைப்புகள் ஆட்சேபிக்கின்றன. அந்தப் பிராணிகளுக்கு இருக்கும் ஆதரவும் அரவணைப்பும்கூட இந்த மனிதர்களுக்கு இல்லை. ஏன்? அவர்கள் ஏழைகள், அவர்கள் பிச்சையெடுத்தார்கள் அவ்வளவே. அதற்காக மனிதனுக்கு மனிதன் காட்டும் மரியாதை, அவர்களுடைய உரிமை என்று மறந்துபோகலாமா? அதுவும் அரசு? பிச்சையெடுத்தால் மனநோயாளிகளா? இல்லை குற்றவாளிகளா? சில சமயம் அரசின் செயல்பாடுகளே அவர்களை அந்த நிலைக்குத் தள்ளுகின்றன.

தென்னாப்பிரிக்காவில் ஒரு வழக்கு. இம்முறை கொஞ்சம் வழக்கு ஓவர்டோஸ் - விஷயம் அப்படி. நம்முடைய பார்வையின் விளிம்பிற்கு வெளியே நிற்பவர்களுக்கு மனித உரிமைப் பாதுகாப்பு சற்றும் தளரக்கூடாது என்று சொல்ல வேண்டுமானால் வழக்குச் சான்றுகளுடன்தானே முன்வைக்க வேண்டும்?

தென்னாப்பிரிக்காவில் ஒரு நகராட்சியில், ஊரை அழகுபடுத்துகிறோமென்று குடிசையில் வாழும் ஏழை கறுப்பர் குடும்பங்கள் வீதியில் நிறுத்தப்பட்டன. அந்த அரசின் செயலை தென்னாப்பிரிக்க உச்ச நீதிமன்றம் கண்டித்தது. "ஏழைகளின் சுயமதிப்பு அவர்கள் தெருத்தெருவாக தலைசாய்க்க ஒரு இடம் தேடுவதில், பாதிக்கப்படுகிறது. அரசின் நடவடிக்கை வறியவரின் வாழ்க்கை உரிமைகளைப் பறிப்பதாக அமைந்தால் அரசமைப்புச் சட்டத்தின் சமத்துவப் பார்வை காயப்படுகிறது" என்று.

ஆமாம் நீங்கள் காரில் செல்பவர் என்று வைத்துக்கொள்வோம். ""சாலையோரத்தில் நின்ற கடை வண்டிகள் எல்லாம் அப்புறப்படுத்திட்டான் ஸார். சுத்தமா இருக்கு" என்பீர்கள். உங்களுக்கு சாலை சுத்தம். ஆனால், சாலையில் இட்லி விற்றவருக்கு அவர் வாழ்க்கையே அப்புறப்படுத்தப்பட்டது, இல்லையா?

அந்தத் தீர்ப்பு மேலும் சொல்கிறது; ""இந்த அநீதி நடக்கும் இடத்தில் சட்டம் - நீதியின் மேற்பார்வை அவசியம்" என்று. இப்படி மனித உரிமைகள் பாதிக்கப்பட்டால்

நீதிமன்றங்கள் தானுண்டு தன் வேலையுண்டு என்று இருக்க முடியுமா? எப்படி இந்த உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்று இந்த மூன்று தீர்ப்புகளும் கூறுகின்றன.

ஒருமுறை கோபாலகிருஷ்ண காந்தி தன்னுரையில் கேட்டார், ""சாலை ஓரப் பாதைகள் எங்கே போயின? இன்று மேம்பாலங்கள் பல முளைத்துவிட்டன. ஆனால் பாதசாரிகளுக்குப் பாதை?" காரில் போவோருக்கு வசதிகள் வரட்டும், அதற்காக காலால் நடப்பவர்களுக்கு இடமே இல்லாமல் செய்யலாமா? அப்பொழுது ஏழைகள் பெரும்பான்மையாக இருக்கும் இங்கே - ஒதுக்கப்படுகிறார்கள், வேண்டாத எழுத்தை ரப்பரால் அழிப்பதுபோல.

அன்றொரு நாள் ஆராய்ச்சிமணியை அடித்தது ஓர் ஏழைப் பசு. நீதி அரண்மனையில் இருந்து ஓடிவந்து தீர்ப்புக் கொடுத்தது. அன்று அரசுத்துறையும் நீதித்துறையும் ஒரே இடத்தில் இருந்தன. இன்று சட்டத்தை இயற்றுபவர், செயலாக்குபவர், நீதியைப் பரிபாலனம் செய்பவர் என்று மூன்றாகப் பிரிந்தாலும் இலக்கு ஒன்றே. எல்லோரும் மக்களாட்சியில் சமம். வறியவர்களின் மனித உரிமைகள் சிறிதும் மாற்றுக் குறைவல்ல.

நாளைக்கு உங்களிடம் ஒருவர் பிச்சை கேட்டால், என் சிநேகிதர் சொன்னதுபோல அவரைப் பார்த்துக் காசைக் கொடுங்கள் - கொடுப்பதாக இருந்தால்; எதுவாயினும் "மனிதம்' காயப்படாமல் இருக்க வேண்டும்.

### வழக்கத்தைவிட கூடுதலாக 28% பருவ மழை

இந்த ஆண்டில் இதுவரை 28 சதவீதம் கூடுதலாக பருவ மழை பெய்துள்ளதாக இந்திய வானிலை ஆராய்ச்சி மையம் கூறியுள்ளது.

இந்த ஆண்டு பருவமழை திட்டமிட்டபடி கேரளத்தில் ஜூன் 1ஆம் தேதி தொடங்கியது. இதுவரை நாட்டின் மூன்றில் ஒரு பகுதியில் பருவ மழை தொடங்கி உள்ளது. ஜூலை 15ஆம் தேதிக்குள் நாட்டின் அனைத்து பகுதிகளிலும் பருவ மழை தொடங்கும். ஒட்டுமொத்தமாக வழக்கத்தைவிட 28 சதவீதம் கூடுதலாக மழை பெய்துள்ளது.

### தென் தமிழகத்தில் மழை வாய்ப்பு

வெப்பச் சலனம் காரணமாக தென் தமிழகத்தில் சனிக்கிழமையன்று (ஜூன் 15) மழை பெய்யக் கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வடதமிழகத்தின் ஓரிரு இடங்களிலும் மழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென்மேற்குப் பருவமழை தீவிரமடைந்துள்ளதால் கேரளம், கர்நாடகம், ஆந்திர மாநிலங்களில் பலத்த மழை பெய்து வருகிறது. இதன் காரணமாக அம் மாநில நீர் ஆதாரங்களின் நீர் மட்டம் வேகமாக உயர்ந்து வருகிறது. ஆந்திரம், கர்நாடக மாநில அணைகளின் நீர்மட்டம் உயரும் பட்சத்தில் தமிழகத்தில் பூண்டி மற்றும் மேட்டூருக்கு நீர் வரத்து அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில் தமிழகத்தில் வெப்பச் சலனம் காரணமாக பல இடங்களில் மழை பெய்து வருகிறது. மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளில் தென்மேற்குப் பருவமழையின் உபரி மழை பெய்கிறது.

இதன் காரணமாக மாநிலத்தின் முக்கிய அணைகளின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. வியாழக்கிழமை மாலையிலிருந்து வால்பாறை, பாபநாசம், நீலகிரி, செங்கோட்டை உள்ளிட்ட இடங்களில் பரவலாக மழை பெய்தது.

வானிலை முன்னறிவிப்பு: வெப்பச் சலனம் காரணமாக சனிக்கிழமையன்று ராமநாதபுரம், திருநெல்வேலி, தூத்துக்குடி, மதுரை, தேனி, சிவகங்கை, விருதுநகர், திண்டுக்கல் உள்ளிட்ட மாவட்டங்களில் மழை பெய்ய அதிக வாய்ப்புள்ளது. வட தமிழகத்தின் ஓரிரு இடங்களில் மழை பெய்யக் கூடும்.

சென்னையைப் பொருத்தவரை வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒரு சில இடங்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளது. தரைக் காற்று வேகமாக வீசக் கூடும்.

வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி வரை பதிவான மழை அளவு (மில்லி மீட்டரில்): பாபநாசம் - 90, வால்பாறை - 70, சின்னக்கல்லாறு - 60, செங்கோட்டை - 40, கன்னியாகுமரி மாவட்டம் பேச்சிப்பாறை - 30, நீலகிரி மாவட்டம் தேவலா, பெரியார் அணை - 20, கன்னியாகுமரி மாவட்டம் மயிலாடி, பூதபாண்டி, குளச்சல், தக்கலை, நாகர்கோவில், தென்காசி, நீலகிரி மாவட்டம் கூடலூர், நடுவட்டம் - 10.

## தண்ணீர் இல்லாததால் காய்ந்து வரும் கரும்புப் பயிர்கள்



விழுப்புரம் மாவட்டத்தில் நிலவும் கடும் வறட்சி காரணமாக பல்வேறு இடங்களில் போதிய அளவு தண்ணீரின்றி கரும்புப் பயிர்கள் காய்ந்து வருவதால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

விழுப்புரம் மாவட்டத்தை பொறுத்தவரை, பெரும்பாலான விவசாயிகள் கரும்பு சாகுபடி செய்து வருகின்றனர்.இந்நிலையில், பருவமழை பொய்த்துள்ளதால் மாவட்டத்தில் தற்போது கடும் வறட்சி ஏற்பட்டுள்ளது.

இதனால் விழுப்புரம், செஞ்சி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் பல ஏக்கர் நிலங்களில் பயிரிடப்பட்டுள்ள கரும்புப் பயிர்கள் போதிய தண்ணீர் இல்லாமல் காய்ந்துவிட்டன.மேலும் கடும் வறட்சியால் பாசனக் கிணறுகிளிலும் தண்ணீர் வற்றி வருகிறது. இதனால் கரும்பு விவசாயிகளின் வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.இது குறித்து தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாவட்டச் செயலர் கலியமூர்த்தி கூறியது:

சங்கராபுரம், மலையனூர், செஞ்சி, திண்டிவனம், விக்கிரவாண்டி உள்ளிட்ட பகுதிகளில் கடுமையான வறட்சி ஏற்பட்டுள்ளது. இப்பகுதிகளில் பயிரிடப்பட்டுள்ள கரும்புப் பயிர்கள் முழுவதுமாக காய்ந்துவிட்டன.

எனவே, கடும் வறட்சியை சந்தித்து வரும் விழுப்புரம் மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அரசு அறிவிக்க வேண்டும்.மேலும் மாவட்டத்தில் அமலில் உள்ள 144 தடை உத்தரவால், இதற்காக போராடவும் விவசாயிகளால் முடியவில்லை என்றார் அவர்.

## வெள்ளக்கோவில் இறைச்சிக் கடைகளில் நாட்டுக் கோழிகளுக்கு தட்டுப்பாடு

வெள்ளக்கோவில் பகுதி இறைச்சிக் கடைகளில் நாட்டுக் கோழிகளுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

கடந்த வாரங்களில் நாட்டுக்கோழி உயிருடன் கிலோ ரூ.260-க்கும், கறி ரூ.300 வரையும் விற்கப்பட்டது. அனைத்துக் கடைகளிலும் நாட்டுக் கோழிகளைக் காட்டிலும்,பிராய்லர் கோழிகள் குறைவான விலை காரணமாக அதிகளவில் விற்பனையாகின.

இப்போது பிராய்லர் கோழி விலை 100 சதவீதம் உயர்ந்து கறி கிலோ ரூ.180 வரை விற்கப்படுகிறது. ஆனால், நாட்டுக் கோழிகளின் விலை உயராத காரணத்தால் தேவை அதிகரித்து தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

ஆங்காங்கே இருந்த நாட்டுக் கோழிப் பண்ணைகள் ஈமு பண்ணைகளைப் போல மூடப்பட்டு விட்டன. கிராமங்களில் தோட்டம், வீடுகளில் வளர்க்கும் நாட்டுக் கோழிகள்தான் இறைச்சிக் கடைகளுக்கு கொண்டு வரப்படுகின்றன. மதுரை கோழிச்சந்தையில் இருந்தும் வியாபாரிகள் வாங்கி வருகின்றனர். இருப்பினும் போதுமான அளவு கிடைக்காததால் தட்டுப்பாடு நீடிக்கிறது.

### பவானிசாகர் அணை நீர்மட்டம் 35.88 அடி

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் வெள்ளிக்கிழமை நிலவரப்படி 35.88 அடியாக இருந்தது. அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 1,708 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 200 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 1.84 டி.எம்.சி.

### வாழைத்தார் விலை உயர்வு: விவசாயிகள் மகிழ்ச்ச

பரமத்திவேலூர் வாழைத்தார் ஏலச் சந்தையில் வாழைத்தார்களின் விலை உயர்ந்துள்ளதால், வாழை சாகுபடி செய்துள்ள விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

நாமக்கல் மாவட்டம், பரமத்திவேலூர் வட்டத்தில் காவிரி கரையோரப் பகுதிகளான பாண்டமங்கலம், பொத்தனூர், வேலூர், அனிச்சம்பாளையம், குப்புச்சிபாளையம், நன்செய் இடையாறு, ஓலப்பாளையம், மோகனூர் உள்ளிட்ட பகுதிகளில் பூவன்,

ரஸ்தாலி, கற்பூரவள்ளி, பச்சைலாடன், மொந்தன் உள்ளிட்ட வாழை ரகங்கள் சாகுபடி செய்யப்படுகின்றன.

இங்கு விளையும் வாழைத்தார்கள் பரமத்திவேலூரில் நடைபெறும் வாழைத்தார் ஏலச் சந்தைக்கு கொண்டு வரப்பட்டு ஏலம் விடப்படும்.

கடந்த வாரம் நடைபெற்ற ஏலத்தில் பூவன் வாழைத்தார் ஒன்று ரூ.150-க்கும், ரஸ்தாலி ரூ.150-க்கும், பச்சைலாடன்

ரூ.200-க்கும், கற்பூரவள்ளி ரூ.100-க்கும், மொத்தன் வாழைக்காய் ஒன்று ரூ.3-க்கும் ஏலம் போனது.

ஆனால், வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஏலத்தில் பூவன் வாழைத்தார் ரூ.450-க்கும், ரஸ்தாலி ரூ.300-க்கும், பச்சைலாடன் ரூ.300-க்கும், கற்பூரவள்ளி ரூ.200-க்கும், மொத்தன் வாழைக்காய் ஒன்று ரூ.7-க்கும் ஏலம் போனது.

ஏலம் எடுக்க சேலம், ஈரோடு, பழனி, திருப்பூர் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் இருந்து வியாபாரிகள் வந்திருந்தனர். ஏலச் சந்தைக்கு நாள் ஒன்றுக்கு 3000 வாழைத்தார்கள் வரை வருவது வழக்கம். ஆனால், தற்பொழுது சுமார் 700 வாழைத்தார்கள் வரை மட்டுமே வந்திருப்பதால், வாழைத்தார்களின் விலை இரு மடங்காக உயர்ந்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

## கிருஷ்ணகிரியில் இன்று மாங்கனி கண்காட்சி தொடக்கம்

21-ஆவது அகில இந்திய மாங்கனி கண்காட்சி கிருஷ்ணகிரியில் சனிக்கிழமை (ஜூன் 15) தொடங்குகிறது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் சுமார் 49 ஆயிரம் ஹெக்டேர் பரப்பில் மாங்கனி சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. மாவட்டத்திலுள்ள மாங்கனி விவசாயிகளை ஊக்குவிக்கும் விதமாக, வேளாண் துறை, தோட்டக்கலைத் துறை மற்றும் மாவட்ட நிர்வாகம் சார்பில் ஆண்டுதோறும் மாங்கனி கண்காட்சி நடத்தப்படும்.

நிகழாண்டில் கிருஷ்ணகிரி ஆண்கள் மேல்நிலைப் பள்ளி மைதானத்தில் 21-ஆவது மாங்கனி கண்காட்சி சனிக்கிழமை (ஜூன் 15) தொடங்கி 23 நாள்கள் நடைபெற உள்ளது.

தொடக்க விழாவுக்கு மாநில வேளாண்மைத் துறை அமைச்சர் எஸ்.தாமோதரன் தலைமை வகிக்கிறார். நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் கே.பி.முனுசாமி மாங்கனி கண்காட்சியை தொடக்கிவைத்து, அரசு நலத் திட்ட உதவிகள் வழங்கி சிறப்புரையாற்றுகிறார்.

வேளாண்மை துறை இயக்குநர் மு.ராஜேந்திரன், தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை ஆணையர் சத்யபிரதா சாஹு ஆகியோர் திட்ட விளக்கவுரை நிகழ்த்துகின்றனர்.

கண்காட்சியில் பள்ளி மாணவ, மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள், இசை, நாடகக் குழுவினர் மற்றும் இதர கலைஞர்களின் நிகழ்ச்சி, சுற்றுலாத் துறையின் சார்பில் (தென்னக கலைப் பண்பாட்டுத் துறை) கலை நிகழ்ச்சிகளும் நடைபெற உள்ளன.

மேலும், கண்காட்சி அரங்கில் தமிழக அரசின் சாதனை விளக்கும் வகையில் அனைத்துத் துறைகளின் சார்பில் 50 அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

தினமும் மாலையில் பரதநாட்டியம், பொய்க்கால் குதிரை, ஒயிலாட்டம், மயிலாட்டம், தப்பாட்டம், கோலாட்டம், கிராமியப் பாடல்கள், கொழுகொழு குழந்தைகள் போட்டி, சாகச விளையாட்டு, மேஜிக் ஷோ, பட்டிமன்றம், நாடகங்கள், இசை நாற்காலி போட்டி, நாய்கள் கண்காட்சி ஆகியவை நடைபெறும்.

## மேட்டூர் அணையின் நீர்மட்டம் வெள்ளிக்கிழமை மாலை 17.42 அடியாக இருந்தது

மேட்டூர் அணையின் நீர்மட்டம் வெள்ளிக்கிழமை மாலை 17.42 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 21 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து வினாடிக்கு 496 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கல்லணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை.

## தொடர் மழை: கோதையாறு அணைகளுக்கு நீர்வரத்து அதிகரிப்பு

கன்னியாகுமரி மாவட்டத்தில், மேற்குத்தொடர்ச்சி மலைப் பகுதிகளில் கன மழை பெய்து வருவதால் கோதையாறு அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. பலத்த மழையால் கோதையாறில் வீட்டுச் சுவர் இடிந்து மாணவர் காயமடைந்தார்.

கோதையாறில் மின் நிலையம்-1 மற்றும் மின் நிலையம்-2 என இரு மின் உற்பத்தி நிலையங்கள் உள்ளன. மின் நிலையம் 1-ல் 60 மெகாவாட்டும், மின் நிலையம் 2-ல் 40 மெகாவாட்டும் மின்உற்பத்தி செய்யப்படுகின்றன.

கடந்த ஆண்டு போதிய தண்ணீர் இல்லாமை மற்றும் இயந்திரக் கோளாறு காரணமாக இந்த மின்நிலையங்கள் முழுமையாக இயங்காத நிலை இருந்து வந்தது. இந்நிலையில் இப்போது இரு மின் நிலையங்களும் முழு செயல்பாட்டிற்கு தகுதியாக மாற்றப்பட்டுள்ளது.

இதுகுறித்து மின் நிலைய அலுவலர் ஒருவர் கூறியதாவது:

இரு மின்நிலையங்களும் முழு செயல்பாட்டிற்குத் தகுதியானதாகப் புனரமைக்கப்பட்டுள்ளன. மின் நிலையங்களுக்கான அணைகள் அமைந்துள்ளப் பகுதிகளில் தொடர் மழை பெய்து வருகிறது. இதனால் மேல் கோதையாறு மற்றும் கீழ் கோதையாறு அணைகளில் தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது. இதில் கீழ் கோதையாறு அணை நீரைப் பயன்படுத்தி மின் நிலையம் 2 மட்டும் இயக்கப்படுகிறது.

மேல் கோதையாறு அணையை திறந்து மின் நிலையம் 1-ஐ இயக்கினால் இப்போதுள்ள நிலையில் தண்ணீர் வீணாகிவிடும். இதனால் மின் நிலையம் 1-ஐ இயக்குவது தாற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இரு அணைகளுக்கும் அதிக நீர் வந்து கொண்டிருப்பதால் இவ்வாண்டு கூடுதல் மின்சாரம் உற்பத்தி செய்யும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது என்றார். கோதையாறு மின் நிலையங்கள் முழு திறன் அடிப்படையில் இயங்கும் நிலையில், பேச்சிப்பாறை அணைக்கு கூடுதல் நீர்வரத்து கிடைக்க வாய்ப்பு உள்ளது.

வீட்டுச்சுவர் இடிந்து மாணவர் காயம்: கோதையாறு லோயர் கேம்ப் அருகே சந்தைப் பகுதியைச் சேர்ந்தவர் ஜனார்த்தனன். இவரது மகன் ஜெயன். இருவரது வீடுகளும் அருகருகே உள்ளன.

கோதையாறு பகுதியில் வியாழக்கிழமை இரவு பெய்த கனமழையில், ஜனார்த்தனனின் வீட்டுச் சுவர் இடிந்து ஜெயனின் வீட்டுக்குள் விழுந்தது. இதில், கட்டிலில் தூங்கிக் கொண்டிருந்த ஜெயனின் மகன் பிரதாப் (19) பலத்த காயமடைந்தார். பாலிடெக்னிக் கல்லூரி மாணவரான அவர் மார்த்தாண்டத்திலுள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

இதுகுறித்து பேச்சிப்பாறை ஊராட்சி வார்டு உறுப்பினர் ரெகுகாணி, வருவாய்த் துறையினருக்குப் புகார் அளித்துள்ளார்.

## ஆடு வளர்ப்பு பயிற்சி முகாம்

கிள்ளியூர் ஊராட்சி ஒன்றியம், முள்ளங்கனாவிளை ஊராட்சியில் ஆடுகள் வளர்ப்பு பயிற்சி முகாம் நடைபெற்றது.

விலையில்லா ஆடு திட்டத்தின் பயனாளிகளுக்கு இப் பயிற்சி அளிக்கப்பட்டது. முள்ளங்கனாவிளை ஊராட்சித் தலைவர் பிரபா தலைமை வகித்தார். கிள்ளியூர் வட்டார கால்நடை மருத்துவர் சஜயன் முன்னிலை வகித்தார். பறக்கை கால்நடை பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய உதவி பேராசிரியர் கனகராஜதுரை பயிற்சி அளித்தார். ஆதக்கலை கோட்ட உதவி இயக்குநர் விக்டர் ஜான் மோசஸ், பயிற்சியில் பங்கேற்றவர்களுக்கு ரூ.300-க்கான காசோலையை வழங்கினார். கால்நடை மருத்துவ ஆய்வாளர் கிருஷ்ணன், வார்டு உறுப்பினர் சிலுவைராஜ், விஜயகுமார், ரீனா, சுசீலா உள்பட பலர் கலந்துகொண்டனர்.

## அணை நீரில் பாசனத்துக்கே முன்னுரிமை

அணைகளில் தேக்கப்படும் தண்ணீரில் விவசாய பாசனத்துக்கே முன்னுரிமை அளிக்க வேண்டும், அணைகளில் நேரடியாக குடிநீர்த் திட்டக் குழாய்களைப் பதிப்பது உள்ளிட்டவை ஏற்கத்தக்கதல்ல என விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

கன்னியாகுமரி மாவட்ட விவசாயத்திற்கு முக்கிய நீராதாரமாக பேச்சிப்பாறை, பெருஞ்சாணி, சிற்றாறு-1, சிற்றாறு-2 அணைகள் உள்ளன. இவற்றில் தேங்கும் நீரைக் கொண்டு கன்னிப்பூ மற்றும் கும்பப்பூ சாகுபடி என இருபோக நெல் சாகுபடி செய்யப்படுகிறது.

பொதுப் பணித் துறையின் புள்ளிவிவரப்படி மாவட்டத்தில் சுமார் 64 ஆயிரம் ஏக்கர் விளை நிலங்களில் சாகுபடி நடைபெற்று வந்ததாகக் கூறப்பட்டுள்ளது. பருவமழை சரியாக கைகொடுக்காததால், கடந்த இரு ஆண்டுகளாக மாவட்டத்தில் 10 ஆயிரம் ஏக்கரில் மட்டுமே சாகுபடி நடைபெற்றுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

பொதுப்பணித் துறையின் கீழ் 961 பெரிய பாசன குளங்களும், 1486 சிறு பாசனக் குளங்களும் இருந்துள்ளன. ஆனால், போதிய பராமரிப்பின்மை காரணமாக பல்வேறு குளங்களும், கால்வாய்களும் தூர்ந்து போய்விட்டன. கடந்த 15 ஆண்டுகளில் சுமார் 1000 குளங்கள் காணாமல் போய் விட்டதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதற்கிடையே நாகர்கோவில் நகரில் ஏற்பட்டுள்ள குடிநீர்ப் பிரச்னையைச் சமாளிக்க பெருஞ்சாணி அணையிலிருந்து அனந்தனாறு கால்வாய்க்கு தண்ணீர் திறந்து விட்டு மோட்டார்கள் மூலம் தண்ணீர் உறிஞ்சி குழாய் மூலம் கொண்டுவரப்படுகிறது. நாள் ஒன்றுக்கு 50 கன அடி அணைத் தண்ணீர் குடிநீருக்காகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இந்நிலையில் அணையிலிருந்து குழாய் பதித்து நேரடியாக குடிநீருக்கு தண்ணீர் எடுக்கும் திட்டம் பரிசீலனையில் உள்ளதாக தெரியவந்துள்ளது. இத் திட்டத்திற்கு விவசாயிகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து மாவட்ட தேசிய விவசாய சங்கத் தலைவர் ஏ. செல்லப்பன் கூறியதாவது:

விவசாயத்திற்கு முன்னுரிமை அளிக்கவே அணைகள் கட்டப்பட்டுள்ளன. அணை நீரை நம்பி பல ஆயிரம் விவசாய குடும்பங்கள் உள்ளன. ஏற்கெனவே, பருவமழை பற்றாக்குறையால் போதிய தண்ணீர் கிடைக்காமல் தவிப்பில் விவசாயிகள் உள்ளனர்.

இந்தச் சூழலில் அணைகளில் இருந்து நேரடிக் குழாய் அமைத்து குடிநீருக்காகத் தண்ணீர் உறிஞ்ச திட்டமிடுவது விவசாயிகளுக்கு அச்சத்தையும், பெரும் அதிர்ச்சியையும் ஏற்படுத்துகிறது.

குடிநீருக்கு பல்வேறு நீராதாரங்கள் கண்டறியப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து தண்ணீர் பெற அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அணைகளின் தண்ணீரில் விவசாயத்துக்கே முன்னுரிமை அளிக்க வேண்டும். இல்லையெனில் போராடுவதைத் தவிர விவசாயிகளுக்கு வேறு வழியில்லை என்றார் அவர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**15.06.2013 A.M**

---

## தேனியில் மழைநீர் சேகரிப்பு அமைப்பு ஏற்படுத்த தனிக்குழு

தேனி:தேனியில் வீடுகள், தொழில் நிறுவனங்களில் மழைநீர் சேகரிப்பு அமைப்புகளை உருவாக்க நான்கு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

வீடுகள், தொழிற்கூடங்கள், நிறுவனங்களில் மழைநீர் சேகரிப்பு அமைப்புகளை கட்டாயம் உருவாக்க வேண்டும், என அரசு மீண்டும் உத்தரவிட்டுள்ளது.

இதனை தொடர்ந்து அரசு உத்தரவை அமல்படுத்தும் வகையில், தேனி நகராட்சி நான்கு மண்டலங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மண்டலத்திற்கும் தனி அதிகாரிகள் மற்றும் அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் வீடு, தொழிற்கூடங்கள், நிறுவனங்களுக்கு சென்று நேரடியாக ஆய்வு செய்து, மழைநீர் சேகரிப்பு அமைப்புகளை உருவாக்க அறிவுறுத்தி வருகின்றனர்.கமிஷனர், ராஜாராம் கூறுகையில், "மழைநீர் சேகரிப்பு அமைப்பு ஏற்படுத்தாவிட்டால், அவர்கள் மீது கட்டாயம் நடவடிக்கை எடுக்கப்படும். நகராட்சி மூலம் மழைநீர் சேகரிப்பு அமைப்பு அங்கு அமைக்கப்பட்டு, அபராதத்துடன் அவர்களிடம் வசூலிக்கப்படும் என்றார்.

## திருப்புல்லாணியில் 300 பண்ணைக்குட்டைகள்

கீழக்கரை:திருப்புல்லாணி துணை பி.டி.ஓ., ராஜேந்திரன் கூறியதாவது: திருப்புல்லாணி ஒன்றியத்தில் 300 பண்ணைக் குட்டைகள் அமைக்கப்படும். முதற்கட்டமாக 20 இடங்களில் அமைக்கப்படுகிறது.ஒரு லட்சத்து 33 ஆயிரத்து 673 ரூபாயில், 30 மீ., நீளம், 30 மீ., அகலத்தில் ஆறு அடி ஆழத்தில் விவசாய நிலங்களையொட்டி அமைக்கப்படுகிறது. இதற்கான விண்ணப்பம் திருப்புல்லாணி உதவி வேளாண் இயக்குனர் அலுவலகத்தில் வழங்கப்படுகிறது, என்றார்.உதவி வேளாண் இயக்குனர் முகம்மது அப்துல் நசீர்

கூறுகையில், ""பண்ணைக்குட்டைகள் அமைப்பது தொடர்பாக கூடுதல் தகவல்களுக்கு 94884 64340ல் தொடர்பு கொள்ளலாம், என்றார்.

## வறட்சி நிவாரணத் தொகைவழங்க இன்றே கடைசி நாள்

சிவகங்கை:""வறட்சி நிவாரண தொகையை, விவசாயிகளுக்கு இன்று மாலைக்குள் கூட்டுறவு வங்கிகள் வழங்கி விடவேண்டும்," என,கலெக்டர் ராஜாராமன் தெரிவித்துள்ளார். தேவகோட்டை, கண்ணங்குடி ஒன்றியத்திற்குட்பட்ட புலியடித்தம்பம், நாகாடி, அனுமந்தக்குடி,கண்ணங்குடி தொடக்க கூட்டுறவு வங்கிகளில்,விவசாயிகளுக்கு வறட்சி நிவாரண தொகை எந்தளவிற்கு வழங்கப்பட்டுள்ளதென, கலெக்டர் ஆய்வு செய்தார். புலியடித்தம்பம் ரேஷன் கடை, சடையமங்கலம் அரசு நடுநிலைப்பள்ளியில் ஆய்வு செய்தார். அவர் கூறுகையில், கூட்டுறவு வங்கிகள், விவசாயிகளுக்கான வறட்சி நிவாரண தொகையை, இன்று மாலைக்குள் (ஜூன் 15) வழங்கிவிடவேண்டும் என, கூட்டுறவு வங்கி செயலர்களுக்கு உத்தரவிட்டார்.

## வறட்சி நிவாரணம் நிறுத்தம்?விவசாயிகள் புகார்: அதிகாரி மறுப்பு

திருப்புத்தூர்:திருப்புத்தூர் தாலுகாவில் வறட்சி நிவாரணம் வழங்கப்படுவது நிறுத்தப்பட்டு விட்டதாக விவசாயிகள் புகார் தெரிவித்துள்ளனர்.திருப்புத்தூர் தாலுகாவில் கடந்த மே 27 லிருந்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் வழங்கப்படுகிறது.வி.ஏ.ஓ.க்கள் வழங்கும் டோக்கன் மூலமே, கூட்டுறவு சங்கத்தில் வறட்சி நிவாரணம் வழங்கப்பட்டு வருகிறது. நேரடி பட்டா உள்ளவர்களில் பெரும்பாலோனோர் வறட்சி நிவாரணம் பெற்று விட்டனர். சுமார் 30 சதவீதத்திற்கும் மேலாக உள்ள, வெளியூரில் வசிக்கும் விவசாயிகள்,கூட்டுப்பட்டா விவசாயிகள் பலரும் தற்போது வறட்சி நிவாரணம் வாங்க தொடங்கியுள்ளனர். இந்நிலையில், கடந்த ஜூன் 12 ம் தேதியன்று விவசாயிகள் பலர், வறட்சி நிவாரணத்திற்காக டோக்கன் வாங்க, வி.ஏ.ஓ.க்களைச் சந்தித்த போது, அதற்கான டோக்கன் கொடுக்கவில்லை. சம்பந்தப்பட்ட வருவாய் ஆய்வாளர்கள் மூலம், வி.ஏ.ஓ.க்களிடமிருந்து டோக்கன்களை திரும்பப் பெற்று விட்டதால் வழங்க இயலாது என்று விவசாயிகளிடம் தெரிவித்துள்ளனர். இதனால்

விவசாயிகள் வறட்சி நிவாரணம் நிறுத்தப்பட்டு விட்டதாக புகார் தெரிவிக்கின்றனர்.தாசில்தார் அமிர்தலிங்கம் கூறுகையில்,"வறட்சி நிவாரணம் தொடர்ந்து வழங்கப்படுகிறது. முறையான விசாரணைக்குப் பின் அனைவருக்கும் நிவாரணம் வழங்கப்படும்' என்றார்.

## முக்கூடலில் விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம்

முக்கூடல் : பாப்பாக்குடி வட்டார விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் முக்கூடலில் நடந்தது. முக்கூடல் டவுண் பஞ். தலைவர் லட்சுமணன் தலைமையில் கூட்டம் நடந்தது. சேரன்மகாதேவி சப்-கலெக்டர் நேர்முக உதவியாளர் பாலசுப்பிரமணியன் முன்னிலை வகித்தார். அம்பை தாசில்தார் சரஸ்வதி அனைவரையும் வரவேற்றார்.கூட்டத்தில் வேளாண்மை துறை தோட்டக்கலை துறை, பட்டு வளர்ச்சி துறை, வருவாய்துறை அலுவலர்கள் திரளாக கலந்து கொண்டனர். ஆனால் விவசாயிகள் குறைந்த அளவில் கலந்து கொண்டனர். விவசாயிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. தோட்டக்கலை துறை சார்பில் இரண்டு விவசாயிகளுக்கு நீரில் கரையும் உரமும், பந்தல் காய்கனி சாகுபடிக்கு 15 ஆயிரம் ரூபாய் நிதியும், திருந்திய நெல்சாகுபடிக்கு மூன்று விவசாயிகளுக்கு 5 ஆயிரத்து 400ம், ஊட்டமேற்றல் தொழுஉரம் திட்டத்தில் நான்கு விவசாயிகளுக்கு 5 ஆயிரத்து 240ம், மண்புழு உரத்தொட்டி அமைக்க ஒருவிவசாயிக்கு 15 ஆயிரமும், தார் பாலின் வழங்கும் திட்டத்தில் ஒரு விவசாயிக்கு 3 ஆயிரத்து 900 மானிய விலையில் வழங்கப்பட்டது. முக்கூடல் வேளாண்மை உதவி இயக்குநர் செந்தில்குமார் தொகுத்து வழங்கினார். முக்கூடல் ஆர்.ஐ.,நவாஸ், வி.ஏ.ஓ., செல்வவிநாயகம் ஆகியோர் ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

## பயிர்களை துவம்சம் செய்யும் மாடுகளுக்கு பவுண்டி அமைக்க விவசாயிகள் கோரிக்கை மனு

முக்கூடல் : மைலப்புரம் பகுதியில் மாடுகளை அடைக்கும் பவுண்டி அமைக்க விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். காங்கேயன் கால்வாய் பாசனத்தின் கடைசி பகுதியான மைலப்புரம், சடையப்பபுரம், சிங்கம்பாறை பகுதியில் உள்ள வண்ணன்குளம் மற்றும் அதைச்சார்ந்த குளங்கள் மூலம் சுமார் 500 ஏக்கர் நிலத்திற்கும் மேல் பாசன வசதி பெறுகிறது.நெற்பயிர், பருத்தி, கம்பு, காய்கறிகள் பயிரிட்டு வருகின்றனர்.வடக்கு

அரியநாயகிபுரம் பகுதி கால்நடைகள் இங்குள்ள குளத்து பகுதியில் மேய்ச்சலுக்கு வருகிறது. மேய்ச்சலுக்கு வரும் மாடுகள் பயிர் வயலுக்குள் புகுந்து அழித்து விடுகிறது. இதனால் இங்குள்ள விவசாயிகள் இரவு பகல் என்று பாராமல் காவல் காத்து வருகின்றனர். அப்படியிருந்தும் மாடுகள் பயிர்களை மேய்ந்து விடுகிறது. அதனால் பயிர்களை மேயும் மாடுகளை அடைத்து வைக்க பவுண்டிகளை இந்த பகுதிகளில் ஏற்படுத்தி பயிர்களை நாசம் செய்யும் மாடுகளை கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இப்பகுதி விவசாயிகள் முக்கூடலில் நடந்த விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டத்தில் மனு கொடுத்துள்ளனர்.

## பாபநாசம் நீர்மட்டம் மேலும் உயர்வு

விக்கிரமசிங்கபுரம் : பாபநாசம் அணையின் நீர்மட்டம் நேற்று சுமார் 4 அடி அதிகரித்து 69.60 அடியானது. நேற்று முன்தினம் 65.90 அடியாக இருந்த பாபநாசம் அணையின் நீர்மட்டம் நேற்று சுமார் 4அடி அதிகரித்து 69.60 அடியானது. அணைக்கு விநாடிக்கு 2495.26கனஅடிநீர் வந்து கொண்டிருந்தது. குடிநீருக்காக அணையிலிருந்து 204.75 கனஅடிநீர் வெளியேற்றப்பட்டது. அணைப்பகுதியில் 86 மி.மீ, பாபநாசம் கீழ் அணையில் 11 மி.மீ, சேர்வலார் அணை பகுதியில் 67மி.மீ, மணிமுத்தாறில் 5.4 மி.மீ அளவில் மழையின் அளவு பதிவாகியுள்ளது. நேற்று முன்தினம் 81.27 அடியாக இருந்த சேர்வலார் அணையின் நீர்மட்டம் நேற்று சுமார் 6 அடி அதிகரித்து 87.60 அடியானது. மணிமுத்தாறு அணையின் நீர்மட்டம் 70.40 அடியாக இருந்தது.

## மழை நீர் சேகரிப்பு விழிப்புணர்வு

சின்னசேலம்:சின்னசேலம் பேரூராட்சி சார்பில் மழை நீர் சேமிப்பு மற்றும் நிலத்தடி நீர் நிலைகளை உயர்த்துவது குறித்து விழிப்புணர்வு ஊர்வலம் நேற்று நடந்தது.
சேர்மன் தேன்மொழி குணசேகரன் தலைமை தாங்கி விழிப்புணர்வு ஊர்வலத்தை கொடியசைத்து துவக்கி வைத்தார். துணை சேர்மன் கந்தசாமி, முன்னாள் துணை சேர்மன் உஷாமுருகேசன் முன்னிலை வகித்தனர். பேரூராட்சி அலுவலகத்திலிருந்து புறப்பட்ட ஊர்வலம் நகரின் முக்கிய வீதிகளின் வழியாக சென்று மீண்டும் அலுவலத்தை வந்தடைந்தது. ரோட்டரி சங்க தலைவர் சேவசேனாதிபதி, அரிமா சங்க தலைவர்

வைணவ பெருமாள், தேர்வு தலைவர் பழனிசாமி, பேரூராட்சி கவுன்சிலர் வெங்கடேசன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## பலன் தருமா பருவமழை!சிறுவாணி நீர்மட்டம் 2 மீ., உயர்வு:உறிஞ்சு குழாயை தொட 3 மீ., தேவை

கோவை:மலைப்பகுதியில் பருவமழை தொடர்ந்து பெய்வதால், சிறுவாணி அணையில் இரண்டு மீட்டர் நீர்மட்டம் உயர்ந்துள்ளது. நீர்உறிஞ்சு குழாய் வழியாக, தண்ணீர் வெளியேற வேண்டுமானால், இன்னும் மூன்று மீட்டர் நீர்மட்டம் உயர வேண்டும்.கோவை மாவட்டத்தில், கடந்தாண்டு தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழை பொய்த்ததால், கடுமையான வறட்சி நிலவுகிறது.

கோவையின் குடிநீர் ஆதாரமான, சிறுவாணி அணையில் வரலாறு காணாத வறட்சி ஏற்பட்டது.சிறுவாணி வனத்தில், 22.40 சதுர கி.மீ., பரப்பிலுள்ள அணையில் 650 மில்லியன் கனஅடி தண்ணீர் தேக்க முடியும். பருவமழை காலத்தில், சிறுவாணி அணை, ஆண்டுக்கு இரண்டு முறை நிரம்புவது வழக்கம். இந்த அணையில் இருந்து, கோவை மாநகராட்சிக்கு தினமும் 85 எம்.எல்.டி., தண்ணீர் வழங்க வேண்டும்.

வனத்திலும் ஏற்பட்ட வறட்சியால், சிறுவாணியில் நீர்மட்டம் சரிந்து, அணையினுள் உள்ள சிறிய தடுப்பணையில் மட்டுமே தண்ணீர் தேங்கி நின்றது.இதனால், சிறுவாணியில் இருந்து தண்ணீர் பம்ப் செய்ய முடியாத சூழல் உருவானது. கேரளா அரசுடன் நடந்த பேச்சுவார்த்தையில், ஜூன் 10 வரையிலும், சிறுவாணி அணையில் இருந்து தினமும் 100 மில்லியன் லிட்டர் தண்ணீர் எடுத்துக்கொள்ள அனுமதி பெறப்பட்டது. சிறுவாணி தடுப்பணையில் இருந்து ஜெனரேட்டர் உதவியுடன் தண்ணீர், பம்ப் செய்து, நீர்புகு கிணற்றுக்கு கொண்டு செல்லப்பட்டது. இந்த முறையில் சிறுவாணியில் இருந்து தினமும் 25 மில்லியன் லிட்டர் தண்ணீர் எடுக்கப்பட்டது.

இந்நிலையில், மே மாத இறுதியில் தென்மேற்கு பருவநிலை துவங்கியது. இம்மாதம் முதல் தேதியில் இருந்து மழை பெய்யத்துவங்கியது. மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் மழை தீவிரமடைந்துள்ளது. இதனால், சிறுவாணி அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது.கடந்த 10 நாட்களில் சிறுவாணி அணையில் 590 மி.மீ., மழை பெய்துள்ளது. இதனால்,

அணையின் நீர்மட்டம் 858.69 மீட்டரில் இருந்து, நேற்றையை நிலவரப்படி 860.65 மீட்டராக உயர்ந்துள்ளது. கடந்த 14 நாட்களில் பெய்த மழையால், சிறுவாணி அணையில் இரண்டு மீட்டர் உயரத்திற்கு நீர்மட்டம் உயர்ந்துள்ளது. சிறுவாணி அணையினுள் உள்ள தடுப்பணையில் இருந்து தண்ணீர் வெளியேறத்துவங்கியுள்ளது. நீர்புகு கிணற்றிலுள்ள நீர்உறிஞ்சு குழாய்க்கு எட்டுமளவுக்கு நீர்மட்டம் உயரவில்லை.

குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகள் கூறுகையில், "சிறுவாணியின் நீர்உறிஞ்சு குழாய் வழியாக தண்ணீர் வெளியேற வேண்டுமானால், இன்னும் மூன்று மீட்டர் நீர்மட்டம் உயர வேண்டும். மழை சீசன் தற்போது தான் துவங்கியுள்ளதால், மழை தீவிரமடையும் போது நீர்மட்டம் மளமளவென உயரும். தினமும் 25 மில்லியன் லிட்டர் தண்ணீர் பம்ப் செய்யப்படுகிறது. மலைப்பகுதியில் வடிந்து வரும் நீருடன் சேர்ந்து தினமும் 40 மில்லியன் லிட்டர் தண்ணீர் வழங்கப்படுகிறது' என்றனர்.

சமவெளியில் சாரல்:மலைப்பகுதியில் மட்டுமே மழை தீவிரமாக உள்ளது, சமவெளியில் மழை குறைவாக உள்ளது. மாவட்டத்தில் நேற்று காலை 8:00 மணி வரை பதிவான மழை (மி.மீ.,) :

சிறுவாணி அணை- 26, சிறுவாணி அடிவாரம்- 13, சோலையாறு - 65, பரம்பிக்குளம் - 6, ஆழியாறு - 2.2, மேல்நீராறு- 61, கீழ் நீராறு- 36, தூணக்கடவு- 5, பெருவாரிப்பள்ளம்- 7, சின்கோனா- 88, வால்பாறை (பி.ஏ.பி.,)- 39, வால்பாறை (தாலுகா)- 49, வேட்டைக்காரன்புதூர்- 11.6, பொள்ளாச்சி (பி.ஏ.பி.,)- 6.7, மணக்கடவு- 10.2, நவமலை- 1.2, சர்க்கார்பதி- 6

## கிராமப்புறபகுதிகளில் மழை பொழிந்ததால்...மகிழ்ச்சி! விதைப்புப்பணியில் களமிறங்கிய விவசாயிகள்

பொள்ளாச்சி:பொள்ளாச்சி மற்றும் அதன் சுற்றுவட்டார கிராமப்பகுதிகளில் தென்மேற்குப்பருவமழை தீவிரமடைந்துள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

பொள்ளாச்சி மற்றும் அதன் சுற்றுப்புறப்பகுதிகளிலுள்ள விவசாயிகள், உழுது தயாராக வைத்திருந்த விவசாய நிலத்தில் உழவுப்பணியையும், விதைப்புப்பணியையும் துவக்கியுள்ளனர்.பெரும்பாலான மானாவாரி விவசாய விளை நிலங்களில் சோளம், மக்காச்சோளம், ராகி, உளுந்து, கொண்டைக்கடலை, துவரை, பச்சைப்பயறு,

தட்டைப்பயறு உள்ளிட்ட தானியங்களை விதைப்பு செய்து வருகின்றனர்.இது தவிர சில தோட்டங்களில் பாகற்காய், சுரைக்காய், வெண்டைக்காய், தக்காளி, கொத்தவரை, அவரை, பூசணிக்காய், மிளகாய், கறிவேப்பிலை போன்ற பயிர்களை பயிரிட்டுள்ளனர். இன்னும் சில தோட்டங்களில் இங்கிலீஷ் காய்கறியான முள்ளங்கி, டர்னிப், நூல்கோல், பீட்ரூட், கேரட், முட்டைகோஸ், காலிபிளவர் உள்ளிட்டவற்றை பயிரிட்டுள்ளனர். தற்போது பெய்த மழையைப்போன்று, மேலும் இரண்டு மழை பெய்தால், பயிரிட்ட காய்கறி பயிர்கள் நல்ல வளர்ச்சியை எட்டும் என்று விவசாயிகள் எதிர்பார்த்துள்ளனர்.

தரமான விதைகளை பயிரிடுங்கள்: பொள்ளாச்சி பகுதியில் தென்மேற்கு பருவமழை தொடர்ந்து பெய்து வருகிறது. விவசாயிகள் விதைப்பின் போது அரசு சான்று பெற்ற தரமான விதைகளை விவசாயிகள் வாங்கி பயன்படுத்த வேண்டும். அப்போது தான் விவசாயிகள் எதிர்பார்த்த அளவை விட அதிக மகசூலை பெற முடியும்.

இது குறித்து கோவை விதை ஆய்வு துணை இயக்குனர் பொன்னுசாமி நடேசன், பொள்ளாச்சி விதை ஆய்வாளர் விஸ்வநாதன் ஆகியோர் கூறியிருப்பதாவது: விவசாயத்தின் வெற்றிக்குக்காரணம் நல்ல விதையை தேர்வு செய்வதாகும். அதனால் விவசாயி ஒவ்வொருவரும் நல்ல தரமான விதையை தேர்வு செய்ய வேண்டும். அதனால் பொள்ளாச்சி மற்றும் அதன் சுற்றுப்புறப்பகுதிகளிலுள்ள வேளாண்உற்பத்தி நிலையங்கள், விதைநிலையங்களில் விதை உரிமம் வழங்கப்பட்டுள்ள கடைகளில் மட்டுமே விதைகளை வாங்க வேண்டும்.

விதைப்பாக்கெட்டுகளில் விதைச்சான்று அட்டை, ஆதாரஅட்டை அல்லது உண்மைநிலை அட்டை பொருத்தப்பட்டுள்ளதா என்பதை பரிசோதித்து வாங்க வேண்டும். அதோடு விதை உற்பத்தி செய்யப்பட்ட இடம், எந்த முறையில் உற்பத்தி செய்யப்பட்டது, அதன் முகவரி ஆகியவற்றை கேட்டு வாங்கிப்பெற வேண்டும்.விற்பனை செய்யப்படும் விதைகள் அரசால் பதிவு செய்யப்பட்டதா என்று கேட்டு விவசாயிகள் தெரிந்து கொள்ள வேண்டும். காலாவதியான விதைகளை வாங்கி விதைத்தல் கூடாது. விதை விற்பனையாளர்கள் அரசால் வழங்கப்பட்ட விதை வினியோக உரிமத்தை விவசாயிகள் பார்வையில் படும்படி கடைகளில் தொங்கவிட வேண்டும்.

விதை விற்பனை நிலையங்களை விதை ஆய்வாளர்கள் அடிக்கடி தொடர் ஆய்வு மேற்கொள்ள வேண்டும். முளைப்புத்திறன் உள்ள தரமான விதைகளை வழங்க, நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். சில நேரங்களில் விதைமாதிரி எடுத்து ஆய்வுக்குட்படுத்த வேண்டும். இதில் ஏதேனும் குறைபாடுகள் இருந்து விற்பனைக்கு வைக்கப்பட்ட விதை தரமற்ற விதை என்று தெரியவந்தால், கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.தரம் குறைவான விதைகளின் வினியோகத்தை முற்றிலும் ஒழிக்க, விதை ஆய்வுத்துறையினர் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.இவ்வாறு அவர்கள் கூறினர்.

## நடப்பு ஆண்டு மே மாதத்தில்...நாட்டின் பொது பணவீக்கம் 4.70 சதவீதமாக சரிவு

புதுடில்லி:நடப்பு 2013ம் ஆண்டு மே மாதத்தில், மொத்த விலைக் குறியீட்டு எண் அடிப்படையில் கணக்கிடப்படும், நாட்டின் பொதுப் பணவீக்கம், 4.70 சதவீதமாக சரிவடைந்துள்ளது.

இது, இதற்கு முந்தைய ஏப்ரல் மாதத்தில், 4.89 சதவீதம் என்ற அளவிலும், கடந்தாண்டு மே மாதத்தில், 7.55 சதவீதம் என்ற அளவிலும் இருந்தது என, மத்திய அரசு வெளியிட்டுள்ள புள்ளிவிவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எண்ணெய் வித்துக்கள்:சென்ற மே மாதத்தில், தயாரிப்பு துறை பொருட்களின் விலை, 3.11 சதவீதமாக சரிவடைந்துள்ளது. இது, இதற்கு முந்தைய ஏப்ரல் மாதத்தில், 3.41 சதவீதம் என்ற அளவில் அதிகரித்து காணப்பட்டது.

மதிப்பீட்டு மாதத்தில், நூலிழை, எண்ணெய் வித்துக்கள், தாதுப் பொருட்கள் உள்ளிட்ட உணவு சாரா பொருட்களுக்கான பணவீக்கம்,4.88 சதவீதம் என்ற அளவில் வீழ்ச்சி கண்டுள்ளது.இது, இதற்கு முந்தைய ஏப்ரல் மாதத்தில், 7.59 சதவீதம் என்ற அளவில் உயர்ந்து காணப்பட்டது.

உணவு சாரா பொருட்களுக்கான பணவீக்கம் குறைந்துள்ள அதே வேளையில், உணவுப் பொருட்களுக்கான பணவீக்கம், மிகவும் அதிகரித்துள்ளது.குறிப்பாக, சென்ற மே மாதத்தில் உணவுப் பொருட்களுக்கான பணவீக்கம், 8.25 சதவீதம் என்ற அளவில் உயர்ந்துள்ளது. இது, சென்ற ஏப்ரல் மாதத்தில், 6.08 சதவீதம் என்ற அளவில் குறைந்து காணப்பட்டது.

மதிப்பீட்டு மாதத்தில், உணவுப் பொருட்களுக்கான பணவீக்கம் அதிகரித்துள்ளதற்கு, காய்கறிகள், வெங்காயம், முக்கிய உணவு தானியங்கள் ஆகியவற்றின் விலை உயர்வே

காரணமாகும்.குறிப்பாக, கணக்கீட்டு மாதத்தில், காய்கறிகளின் விலை, 4.85 சதவீதம் என்ற அளவில் அதிகரித்துள்ளது.

இது, இதற்கு முந்தைய ஏப்ரல் மாதத்தில், மைனஸ் 9.05 சதவீதம் என்ற அளவில் மிகவும் பின்னடைவை கண்டிருந்தது.மேலும், வெங்காயத்தின் விலை, சென்ற மே மாதத்தில், 97.40 சதவீதம் அதிகரித்து உள்ளது. இது, இதற்கு முந்தைய ஏப்ரலில், 91.69 சதவீதம் குறைந்து இருந்தது.

அதேசமயம், மதிப்பீட்டு மாதத்தில், கோதுமை விலை, 12.65 சதவீதம் என்ற அளவில் சரிவடைந்துள்ளது. இது, இதற்கு முந்தைய ஏப்ரல் மாதத்தில், 13.89 சதவீதம் என்ற அளவில் அதிகரித்து காணப்பட்டது.

இதே போன்று, சென்ற ஏப்ரலில்,மைனஸ் 2.42 சதவீதம் என்ற அளவில் குறைந்திருந்த உருளைக் கிழங்கின் விலை, மே மாதத்தில், மைனஸ் 3.44 சதவீதம் என்ற அளவில் @மலும் சரிவடைந்து உள்ளது.

அதேசமயம், சென்ற மே மாதத்தில், முட்டை, மீன் மற்றும் இறைச்சி ஆகியவற்றிற்கான பணவீக்கம், 11.21 சதவீதம் என்ற அளவில் உயர்ந்துள்ளது. இது, இதற்கு முந்தைய ஏப்ரல் மாதத்தில், 10.44 சதவீதம் என்ற அளவில் இருந்தது.

மின்சாரம்:மதிப்பீட்டு மாதத்தில், பருப்பு வகைகளின் விலையும், 5.95 சதவீதம் என்ற அளவில் மிகவும் குறைந்துள்ளது.அதேசமயம், அரிசி மற்றும் முக்கிய உணவு தானியங்களின் விலை முறையே, 18.48 சதவீதம் மற்றும் 16.01 சதவீதம் என்ற அளவில் அதிகரித்துள்ளது.

சென்ற மே மாதத்தில், எரிபொருள் மற்றும் மின்சாரம் ஆகியவற்றிற்கான பணவீக்கம், 7.32 சதவீதம் என்ற அளவில் சரிவடைந்துள்ளது. இது, இதற்கு அடுத்த ஏப்ரல் மாதத்தில், 8.84 சதவீதம் என்ற அளவில் அதிகரித்து காணப்பட்டது.

அண்மையில், வெளியிடப்பட்ட சென்ற மே மாதத்திற்கான சில்லரை விலை பணவீக்கமும், கடந்த 15 மாதங்களில் இல்லாத அளவாக, 9.31 சதவீதமாக குறைந்துள்ளது.

தங்கம் இறக்குமதி:சென்ற மார்ச் மாதத்தில், பொதுப் பணவீக்கம், 5.96 சதவீதம் என்ற அளவில் இருந்தது என, தற்காலிக மதிப்பீட்டில் தெரிவிக்கப்பட்டிருந்தது. இது, தற்போது, 5.65 சதவீதமாக மறுமதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.இதுகுறித்து, திட்டக்குழு துணைத் தலைவர் மான்டேக் சிங் அலுவாலியா கூறியதாவது:

பணவீக்கம் குறைந்திருப்பது திருப்தி அளிக்கிறது. ரிசர்வ் வங்கி, இதை கணக்கில்

கொண்டு, பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில், முக்கிய கடனுக்கான வட்டி விகிதங்களை குறைப்பது பற்றி முடிவு செய்ய வேண்டும்.

தங்கம் இறக்குமதி குறைந்து வருவதால், நடப்பு நிதியாண்டில், நாட்டின் நடப்பு கணக்கு பற்றாக்குறை, குறையும். இவ்வாறு மான்டேக் சிங் அலுவாலியா கூறினார்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**15.06.2013 A.M**

---

## நீர்பிடிப்பு பகுதிகளில் கர்நாடக அணைகளில் நீர்மட்டம் உயர்கிறது



பெங்களூர்: காவிரி நீர்ப்பிடிப்பு பகுதியில் மழை காரணமாக கர்நாடக அணைகளில் நீர்மட்டம் உயர்கிறது. கர்நாடகா-தமிழக விவசாயிகளின் ஜீவநாடியாக இருப்பது கே.ஆர்.எஸ். அணை. வழக்கமாக, ஜூனில் தொடங்கும் தென்மேற்கு பருவமழையில் அணை வேகமாக நிரம்பி விடும். ஆனால், போதிய மழை இல்லாததால் அணையில் நேற்று முன்தினம் நிலவரப்படி 62.85 அடி தண்ணீர் மட்டுமே இருந்தது. அணைக்கு வினாடிக்கு 227 கன அடி தண்ணீர் வந்தது. இந்நிலையில் நேற்று முதல் மண்டியா மாவட்டம், ஸ்ரீரங்கபட்டணம் தாலுகா மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளில் நல்ல மழை பெய்து வருவதால், கே.ஆர்.எஸ். அணைக்கு வினாடிக்கு 1,800 கன அடி தண்ணீர் வருகிறது. அணையின் நீர்மட்டம் 64.15 அடியாக உயர்ந்துள்ளது. இந்த மழை நீடித்தால் அணை வேகமாக நிரம்பும் வாய்ப்புள்ளது. 2,284 அடி உயரமுள்ள கபினி அணையில் 2,253.62 அடி தண்ணீர் உள்ளது. அணைக்கு வினாடிக்கு 2,750 கன அடி தண்ணீர் வருகிறது. 2,859 அடி உயரமுள்ள ஹாரங்கி அணையில் 2.809 அடி தண்ணீர் உள்ளது. அணைக்கு வினாடிக்கு ஆயிரத்து 350 கன அடி தண்ணீர் வந்து கொண்டுள்ளது.

## கர்நாடகா மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கு டெல்டாவில் குறுவை சாகுபடிக்கு 12 மணி நேர மும்முனை மின்சாரம்



சென்னை: டெல்டா பகுதியில் குறுவை சாகுபடிக்காக கடந்த ஆண்டு வழங்கியதுபோல், நடப்பாண்டிலும் 12 மணி நேர மும்முனை மின்சாரம் வழங்கப்படும் என்றும், கர்நாடகா மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடரப்படும் என்றும் முதல்வர் ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.காவிரி டெல்டா விவசாயிகள் குறுவை சாகுபடியை மேற்கொள்வது குறித்து, தலைமைச் செயலகத்தில் முதல்வர் ஜெயலலிதா தலைமையில் விரிவான ஆய்வு கூட்டம் நடந்தது. இதில், அமைச்சர்கள் ஓ.பன்னீர்செல்வம், நத்தம் விஸ்வநாதன், கே.பி.முனுசாமி, வைத்தியலிங்கம், தாமோதரன், கே.வி.ராமலிங்கம், வெங்கடாசலம், தலைமைச் செயலாளர் ஷீலா பாலகிருஷ்ணன், மின்வாரிய தலைவர் ஞானதேசிகன், நிதித்துறை முதன்மை செயலாளர் சண்முகம், பொதுப்பணித்துறை செயலாளர் சாய்குமார், வேளாண்மை துறை செயலாளர் சந்தீப் சக்சேனா, அரசு தலைமை வழக்குரைஞர் சோமயாஜிலு, சட்டத்துறை செயலாளர் ஜெயச்சந்திரன் மற்றும் அரசு உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து, முதல்வர் ஜெயலலிதா வெளியிட்ட அறிக்கை:மேட்டூர் அணையின் இருப்பு 3.45 டிஎம்சி அடியாக மட்டுமே உள்ளது. அணையின் நீர் வரத்து வினாடிக்கு 60 கன அடி என்ற வீதத்தில் உள்ளது.

மேட்டூர் அணையின் நீர் இருப்பு போதுமானதாக இருந்து, அணைக்கு வரும் தண்ணீரின் அளவு நல்ல முறையில் இருந்தால் மட்டுமே, குறுவை சாகுபடிக்கு மேட்டூர் அணையில் இருந்து தண்ணீரை திறக்க முடியும். மேட்டூர் அணையின் நீர்மட்டம் 17.65 அடியாக இருப்பதால், குறுவை சாகுபடிக்கு மேட்டூர் அணையில் இருந்து, தற்போது தண்ணீர் திறந்துவிட இயலாது. 2013ம் ஆண்டில் மழையின் அளவு குறைவாக இருப்பதால் நிலத்தடி நீரின் அளவும் குறைந்துள்ளது.மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர்

திறந்துவிட முடியாத சூழ்நிலையில், தஞ்சாவூர், திருவாரூர், கடலூர் மாவட்டங்களில் கடந்த சில நாட்களாக தென்மேற்கு பருவமழை பெய்து வருகிறது. இதை வைத்து, நடவு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் சில ஏக்கர் நிலப்பரப்பில் நெல் நாற்றங்கால் விடப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். இதையடுத்து, இந்த இக்கட்டான சூழ்நிலையில், டெல்டா விவசாயிகள் அதிக அளவில் குறுவை சாகுபடியை மேற்கொள்வதற்கு தேவையான உதவிகள் புரிவது மற்றும் புதிய தொழில்நுட்ப உத்திகளை கையாளுவது குறித்து, அதிகாரிகளுடன் கலந்துரையாடினேன். இதன் அடிப்படையில் கீழ்க்கண்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும். அதன்படி,

* நிலத்தடி நீரை தற்போது பயன்படுத்தி நெல் சாகுபடியை மேற்கொள்ளும் வகையில், டெல்டா மாவட்டங்களை சேர்ந்த விவசாயிகளுக்கு கடந்த ஆண்டு வழங்கியதுபோல், நடப்பாண்டிலும் 12 மணி நேர மும்முனை மின்சாரம் வழங்கப்படும். இந்த மின்சாரம் இன்று முதல் செப்டம்பர் மாதம் வரை வழங்கப்படும்.
* நீர் ஆதாரத்திலிருந்து வயலுக்கு நீரை எடுத்து செல்வதற்கு ஏதுவாக 180 மீட்டர் நீளம், 90 மில்லி மீட்டர் விட்டம் கொண்ட 6000 எச்டிபிஇ குழாய்கள் விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்படும்.
* உயிர் உரங்கள், நுண்ணூட்ட சத்துக்கள், தாவர பூச்சிக்கொல்லி ஆகியவை இலவசமாக வழங்கப்படும்.

அரசின் இந்த நடவடிக்கைகளின் காரணமாக, சுமார் ஒரு லட்சம் ஏக்கர் பரப்பில் குறுவை சாகுபடி மேற்கொள்ள இயலும்.

காவிரி மேலாண்மை வாரியம் அமைக்கப்பட வேண்டும் என்ற தமிழக அரசின் இடைக்கால மனு 10.5.2013 அன்று உச்ச நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது. அப்போது, தற்காலிகமாக ஒரு மேற்பார்வை குழு அமைக்கலாம் என கர்நாடகா தெரிவித்தது. அதன் அடிப்படையில் அமைக்கப்பட்ட தற்காலிக மேற்பார்வை குழு 12.6.2013 அன்று கூடியபோது, கர்நாடக அரசு இந்த குழு முறைப்படி அமைக்கப்படவில்லை என்றும், இந்த குழு எந்த முடிவையும் எடுக்க முடியாது என்றும்

தெரிவித்தது.இதிலிருந்து, தமிழகத்துக்கு தண்ணீர் வழங்க கூடாது என்ற நிலைப்பாட்டை, கர்நாடகா எடுத்து இருப்பது தெள்ளத் தெளிவாகிறது. கர்நாடகா கேட்டுக் கொண்டதன் அடிப்படையில் அமைக்கப்பட்ட தற்காலிக மேற்பார்வை குழுவுக்கு முடிவு எடுக்கும் அதிகாரம் இல்லை என்று கூறுவதால், இது உச்ச நீதிமன்றத்தின் உத்தரவை அவமதிக்கும் செயலாகும். எனவே, தமிழகத்தின் சார்பில் கர்நாடகா மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடரப்படும்.அதேபோன்று, காவிரி நடுவர் மன்ற இறுதி ஆணை மத்திய அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளதால், அந்த ஆணையின் அடிப்படையில் காவிரி மேலாண்மை வாரியம், காவிரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவை உடனடியாக அமைக்கப்பட வேண்டும் என்ற ஒரு மனுவும் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும்.இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## டெல்டா மாவட்டங்களில் குறைந்து வரும் குறுவை சாகுபடி விவசாய தொழிலாளர்கள் 3 லட்சம் பேர் வேலையிழப்பு



தஞ்சை: காவிரி டெல்டா மாவட்டங்களில் குறுவை சாகுபடி பரப்பளவு சில ஆண்டுகளாக குறைந்து கொண்டே வருகிறது. இதனால் 3 லட்சம் விவசாய தொழிலாளர்கள் வேலை இழந்துள்ளனர். தமிழகத்தில் சேலம், நாமக்கல், ஈரோடு, கரூர், திருச்சி, அரியலூர், தஞ்சை, திருவாரூர், நாகை, புதுக்கோட்டை, கடலூர் மற்றும் காரைக்கால் ஆகிய மாவட்டங்களில் குறுவை சாகுபடிக்காக ஆண்டுதோறும் மேட்டூரில் இருந்து ஜூன் 12ம் தேதி தண்ணீர் திறந்து விடப்படுவது வழக்கம். ஆனால், பருவமழை பொய்த்ததாலும்,

மேட்டூர் நீர்பிடிப்பு பகுதிகளில் மழை இல்லாததாலும், கடந்த ஆண்டு மேட்டூர் அணையில் குறிப்பிட்ட அளவு நீர்மட்டம் உயராததால் அணையில் இருந்து தண்ணீர் திறந்துவிடப்படவில்லை. இதனால், காவிரி நீரை நம்பி குறுவை சாகுபடி பணிகளை தொடங்கிய விவசாயிகள் நஷ்டத்துக்கு ஆளாகினர்.குறுவை சாகுபடி இழப்பை ஈடுகட்டும் வகையிலும், சம்பா சாகுபடி இலக்கை எட்டுவதற்காகவும் அரசு அறிவித்த சம்பா சாகுபடி சிறப்பு தொகுப்பு திட்டமும் பயனளிக்கவில்லை. டெல்டா மாவட்டங்களில் குறுவை சாகுபடிக்காக, கடந்த ஆண்டு தாமதமாக செப்டம்பர் 17ம் தேதி மேட்டூரிலிருந்து தண்ணீர் திறக்கப்பட்டது. இதனால், கடந்த ஆண்டு தஞ்சை மாவட்டத்தில் குறுவை சாகுபடி 21,655 எக்டேரிலும், திருவாரூர் மாவட்டத்தில் 13,046 எக்டேரிலும், நாகை மாவட்டத்தில் 17,115 எக்டேரிலும், கடலூர் மாவட்டத்தில் 8,016 எக்டேரிலும் மேற்கொள்ளப்பட்டது.2002ம் ஆண்டில் தஞ்சை, திருவாரூர், நாகை மாவட்டங்களில் 3.69 லட்சம் எக்டேரில் சாகுபடி மேற்கொள்ளப்பட்டு 9.94 லட்சம் டன்னும், 2003ல் 3.56 லட்சம் எக்டேரில் சாகுபடி மேற்கொள்ளப்பட்டு 13.03 லட்சம் டன்னும், 2006ல் அதிகபட்சமாக 5.26 லட்சம் எக்டேரில் சாகுபடி மேற்கொள்ளப்பட்டு 31.88 லட்சம் டன்னும் நெல் உற்பத்தி செய்யப்பட்டது.

ஆனால், அதன்பின்னர், டெல்டா மாவட்டங்களில் குறுவை மற்றும் சம்பா சாகுபடி பரப்பளவு குறையத்தொடங்கியது.தஞ்சை மாவட்டத்தில் 2009-10ம ஆண்டில் 22,037 எக்டேர் சாகுபடி மேற்கொள்ளப்பட்டது. 2010-11ம் ஆண்டில் 14,030 எக்டேரிலும், 2011-12ம் ஆண்டில் பாசனத்திற்காக ஜூன் 6ம் தேதியே மேட்டூர் அணை திறக்கப்பட்டதால் 45 ஆயிரம் எக்டேரில் சாகுபடி மேற்கொள்ளப்பட்டது. அதேபோல் 2011-12ம ஆண்டில் திருவாரூர் மாவட்டத்தில் 39,200 எக்டேரிலும், நாகை மாவட்டத்தில் 42,848 எக்டேரிலும் குறுவை சாகுபடி மேற்கொள்ளப்பட்டது.தஞ்சை மாவட்டத்தில் கடந்த ஆண்டு 20 ஆயிரம் எக்டேரில் மட்டுமே குறுவை சாகுபடி செய்யப்பட்டது. திருவாரூர் மாவட்டத்தில் கடந்த ஆண்டு குறுவை சாகுபடி பரப்பு 13 ஆயிரம் எக்டேராகவும், நாகை மாவட்டத்தில் 17,115 எக்டேராகவும் குறைந்தது.இந்நிலையில், இந்த ஆண்டும் மேட்டூர் அணையில் போதிய நீர் இல்லாததால், டெல்டா மாவட்டங்களில் குறுவை சாகுபடி கேள்விக்குறியாகியுள்ளது.

எனினும் பம்ப்செட்களை நம்பி டெல்டா மாவட்ட விவசாயிகள் தற்போது குறுவை சாகுபடியை தொடங்கியுள்ளனர். நடப்பு ஆண்டில் தஞ்சை மாவட்டத்தில் இதுவரை 480 எக்டேரில் நாற்றங்கால் விடப்பட்டு, 8 ஆயிரம் எக்டேரில் குறுவை சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

அதேபோல், திருவாரூர் மாவட்டத்தில் இதுவரை 9 ஆயிரம் எக்டேரிலும், நாகை மாவட்டத்தில் 7,100 எக்டேரும் குறுவை சாகுபடி மேற்கொள்ளப்பட்டுள்ளது.தஞ்சை, திருவாரூர், நாகை மாவட்டத்தில் காவிரி தலைமடை மற்றும் நடுமடை பகுதிகளில் மட்டுமே இச்சாகுபடி மேற்கொள்ளப்பட்டுள்ளது. கடைமடை பகுதிகளில் சாகுபடி பணிகள் இன்னும் தொடங்கப்படாமலேயே இருக்கின்றன.கைவிட்டு போகும் விவசாயம்தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட செயலர் சாமி.நடராஜன் கூறியதாவது: காவிரியில் தண்ணீர் திறந்துவிட காலதாமதம், வறட்சி, வேளாண் உற்பத்தி பொருட்களுக்கு போதிய விலையின்மை போன்ற பல்வேறு காரணங்களால் சிறு விவசாயிகள் விவசாயத்தை விட்டுவிட்டனர். இதனால், விளைநிலங்களின் பரப்பளவு டெல்டா மாவட்டங்களில் பாதியாக குறைந்துவிட்டது. விளை நிலங்கள் குறைந்ததால் அதை நம்பி வேளாண் தொழிலில் ஈடுபட்டுவந்த தொழிலாளர்களும் வருமானம் இல்லாததால் திருப்பூர், கோவை போன்ற தொழில் நகரங்களுக்கு இடம்பெயர்ந்துவிட்டனர்.தமிழகத்தில் 329 மில்லியன் எக்டேர் விளைநிலங்கள் உள்ளன. இதில் 148 மில்லியன் எக்டேர் நிலங்களுக்கு பாசன வசதியில்லை.

இதனால், தமிழகத்தில் உள்ள மொத்த விளை நிலங்களில் 45 சதவீதம் தரிசாக கிடக்கிறது. காவிரியில் தண்ணீர் இல்லாததாதலும், வறட்சி காரணமாகவும், டெல்டா மாவட்டங்களிலும் விளைநிலங்களின் பரப்பளவும் பாதியாக குறைந்துள்ளது. தஞ்சை மாவட்டத்தில் மட்டும் ஒன்றரை லட்சம் ஏக்கரில் நெல் சாகுபடி குறைந்துள்ளது.தஞ்சை, திருவாரூர், நாகை மாவட்டங்களில் 9 லட்சத்திற்கும் அதிகமான விவசாய தொழிலாளர்கள் இருந்தனர். ஆனால், விளை நிலங்கள் குறைந்ததால் வேலையின்மை, வறுமை காரணமாக 3 லட்சம் வேளாண் தொழிலாளர்கள் தற்போது வேலை

இழந்துள்ளனர். எனவே, இந்த ஆண்டில் குறுவை சாகுபடி செய்து விவசாயிகளுக்கும் விவசாய தொழிலாளர்களுக்கும் ஏற்படும் இழப்பை தவிர்க்கும் வகையில் அரசு மாற்று திட்டத்தை அறிவிக்க வேண்டும்.இவ்வாறு சாமி.நடராஜன் கூறினார்

## அமராவதி அணை நீர்மட்டம் ஒரே நாளில் 4 அடி உயர்ந்தது



உடுமலை: உடுமலை அருகே உள்ளது அமராவதி அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளான பாம்பாறு, தேனாறு,சின்னாறு,கூட்டாறு ஆகிய பகுதிகளில் கடந்த சில நாட்களாக கனமழை பெய்து வருகிறது. இதனால் ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. அந்த தண்ணீர் தூவானம் வழியாக அமராவதி அணைக்கு வருகிறது. கடந்த 10ம் தேதி அணைக்கு வினாடிக்கு 216 கனஅடி தண்ணீர் வந்தது. 13ம் தேதி 626 கன அடியும், நேற்று காலையில் வினாடிக்கு 1155 கனஅடி தண்ணீரும் வந்தது. 13ம் தேதி அணையின் நீர்மட்டம் 24.61அடியாக இருந்தது. நேற்று காலையில் 28.87 அடியாக உயர்ந்தது. ஒரே நாளில் 4 அடி உயர்ந்தது. தொடர்ந்து அணைக்கு நீர்வரத்து இருப்பதால் நீர்மட்டம் உயர்ந்து கொண்டு இருக்கிறது.

## மலைப்பகுதியில் மழை பொழிவு குமரி, நெல்லை அணைகளின் நீர்மட்டம் உயர்வு



நாகர்கோவில்: பருவமழை தீவிரமடைந்ததையொட்டி, மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் நல்ல மழை பெய்கிறது. இதனால், குமரி, நெல்லை மாவட்டங்களில் உள்ள அணைகளின் ந¦ர்மட்டம் ஒரே நாளில் பல அடிகள் உயர்ந்தன.குமரி மாவட்டத்தின் முக்கிய அணையான பேச்சிப்பாறை அணையின் நீர்மட்டம், 17.75 அடியில் இருந்து 18.45 அடியாக உயர்ந்தது. பெருஞ்சாணி அணையின் நீர்மட்டம் 33.30 அடியில் இருந்து நேற்று காலை 35.75 அடியாக உயர்ந்துள்ளது.இதே போல் சிற்றார் 1 & 4.43, சிற்றார் 2 & 4.52, மாம்பழத்துறையாறு & 5.91 அடியாக உள்ளது. அணைக்கு தொடர்ந்து நீர்வரத்து அதிகரித்து இருப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். அதேநேரம் முக்கடல் அணை நீர்மட்டம் மைனஸ் 10.40 அடியாக உள்ளது. இந்த மழை காரணமாக ஆறுகளிலும் தண்ணீர் வரத்து சற்று அதிகரித்து உள்ளது. வறண்டு கிடந்த குமரி அணையில் தற்போது தண்ணீர் வரத்து அதிகரித்து உள்ளது. குமரி கடல் பகுதியில் நேற்றும் கடலில் 10 அடி முதல் 20 அடி உயரத்திற்கு பேரலைகள் எழுந்தது.நெல்லை: பாபநாசம் அணையில் 65.90 அடியாக இருந்த நீர்மட்டம் ஒரே நாளில் 4 அடி உயர்ந்து 69.60 அடியானது.

அணைக்கு விநாடிக்கு 2,495 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. அணையில் இருந்து விநாடிக்கு 204 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது.சேர்வலாறு அணை யில் 81.27 அடியாக இருந்த நீர்மட்டம் ஒரே நாளில் 6 அடி உயர்ந்து 87.60 அடியானது. மணிமுத்தாறு அணையின் நீர்மட்டம் 70.40 அடியாகவும், கடனாநதி அணை நீர்மட்டம் ஒரே நாளில் 5 அடி உயர்ந்து 49.50 அடியாக உள்ளது. ராமநதி அணையில் ஒரே நாளில் 3 அடி உயர்ந்து 61 அடியானது.குண்டாறு அணை நீர்மட்டம் 20 அடியானது. அடவிநயினார் அணை 40 அடியானது. செங்கோட்டையில் 43மி.மீ மழை அளவு பதிவானது.தொடர்ந்து மழை பெய்து வருவதால் கார் பருவ நெல் சாகுபடி பணிகளை துவக்க விவசாயிகள் தயாராகி வருகின்றனர். அணைகளின் நீர்மட்டம¢ உயர்ந்து வருவதால் இந்த ஆண்டு பாபநாசம் அணைக்கு உட்பட்ட 7 கால்வாய்களிலும் தண்ணீர் திறக்க திட்டமிட்டுள்ளதாக பொதுப்பணித்துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

## மழை இல்லாததால் சாமந்தி விளைச்சல் பாதிப்பு கிலோ ரூ.120க்கு விற்பனை



சேலம், : தமிழகத்தில் மழை இல்லாததால் சாமந்தி பூ விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது. ஒரு கிலோ சாமந்தி பூ அதிகபட்சமாக ரூ.120 வரை விற்பனை செய்யப்படுகிறது. தமிழகத்தில் சேலம், ஈரோடு, தர்மபுரி, கிருஷ்ணகிரி, காங்கேயம், பொள்ளாச்சி, கோவை, மதுரை, திண்டுக்கல் உள்ளிட்ட பகுதிகளில் பூக்கள் அதிகளவில் சாகுபடி செய்யப்படுகிறது.

கடந்த 6 மாதமாக மழை இல்லாமல் தமிழகத்தில் கடும் வறட்சி ஏற்பட்டது. இதன் காரணமாக, பல்வேறு மாவட் டங்களிலும் பூச்செடிகள் காய்ந்து கருகி விட்டன. பூ விளைச்சல் பாதிக்கப்பட்டு விலை அதிகரித்துள்ளது. இதில் குறிப்பாக மற்ற பூக்களை காட்டிலும், சாமந்தி பூ விளைச்சல் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. வர த்து குறைந்ததால் சாமந்தி பூ விலையும் கடுமையாக உயர்ந்து விட்டது.

இது குறித்து, சேலம் வ.உ.சி மார்க்கெட் பூ வியாபாரி ஆசைத்தம்பி கூறியதாவது: சேலம் மார்க்கெட்டுக்கு வழக்கமாக தினசரி 15 முதல் 20 டன் சாமந்தி பூ விற்பனைக்கு வரும். ஆனால், கடந்த சில நாட்களாக மார்க்கெட்டுக்கு ஒரு டன் பூக்கள் மட்டுமே விற்பனைக்கு வருகிறது. அவையும் சுமாராகத்தான் உள்ளது. இதனால் ரூ.50க்கு விற்ற ஒரு கிலோ சாமந்தி பூ, இப்போது ரூ.100 முதல் ரூ.120 என விற்பனை செய்யப்படுகிறது. குண்டுமல்லி கிலோ ரூ.200 எனவும், ஊசிமல்லி கிலோ ரூ.200 எனவும், கனகாம்பரம் கிலோ ரூ.300 எனவும், சம்பங்கி கிலோ ரூ.100 முதல் ரூ.120 எனவும், கோழிக்கொண்டை கிலோ ரூ.100 எனவும், ரோஸ் கிலோ ரூ.120 எனவும் விற்பனை செய்யப்படுகிறது என்றார்.

## வரத்து குறைந்ததால் மஞ்சள் மார்க்கெட்டுக்கு ஒரு வாரம் விடுமுறை



ஈரோடு : ஈரோடு தனியார் மஞ்சள் மார்க்கெட் மற்றும் கிடங்கு உரிமையாளர் சங்க தலைவர் ரவிசங்கர், செயலாளர் துரைசாமி ஆகியோர் கூறியதாவது: கடந்த ஆண்டு முதல் நடப்பாண்டு வரையிலும் நீடித்து வரும் கடுமையான வறட்சியால் மஞ்சள் சாகுபடி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக இந்த சீசனில் புதுமஞ்சள் வரத்து பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. அதிலும் கடந்த சில நாட்களாகவே தனியார் மஞ்சள் மார்க்கெட்டிற்கும், அரசு ஒழுங்குமுறை விற்பனை கூடத்திற்கும் மஞ்சள் மூட்டைகள் வரத்து மிகவும் குறைந்து விட்டது. மஞ்சள் விலையும் தொடர்ந்து சரிவடைந்து வருகிறது.

எனவே, ஈரோடு செம்மாம்பாளையம் மஞ்சள் மார்க்கெட் வரும் 17ம் தேதி திங்கட்கிழமை முதல் 21ம் தேதி வரை தற்காலிகமாக விடுமுறை விட முடிவு செய்யப்பட்டுள்ளது. 22 மற்றும் 23ம் தேதி வழக்கமான சனி, ஞாயிற்றுக்கிழமையையொட்டி அன்றைய தினமும் விடுமுறை அனுசரிக்கப்பட உள்ளதால் மீண்டும் 24ம் தேதி திங்கட்கிழமை முதல் வழக்கம் போல மஞ்சள் மார்க்கட் இயங்கும். இவ்வாறு நிர்வாகிகள் தெரிவித்தனர்.